பக்கங்கள் : பன்னிரெண்டு

# உதயன்

Registered as a Newspaper

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 23 வள்ளுவர் ஆண்டு 2039 பங்குனி 20 புதன்கிழமை (02.04.2008) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 128

# வன்னிக்கு உணவு, மருந்து வகை எடுத்துச் செல்ல அனுமதி மறுப்பு

## அங்கு பொதுமக்கள் பேரவல நிலையில்

கொழும்பு,ஏப்ரல்2

கிளிநொச்சி உட்பட்ட வன்னிப் பகுதிகளுக்கு கடந்த பெப்ரவரி, மார்ச் மாதங்களில் உணவு, மருந்துப் பொருள்களை எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி மறுத்துள்ளது. இதனால் அந்தப் பகுதிகளில் உள்ள மக்கள் பேரவல நிலையை எதிர்கொள்ளும்இக்கட்டுத் தோன்றியுள்ளதாக ஐக்கிய நாடுகளின் மனிதாபிமான அமைப்புகள் எச்சரித்துள்ளன.

இலங்கையில் மனிதாபிமானப் பணிகளில் ஈடுபட்டுள்ள ஐக்கிய நாடுகளின் நிறுவனங்கள் மற்றும் முக்கிய அரச சார்பற்ற அமைப்புகளிடையே ஒருங்கிணைப்பை ஏற்படுத்தும் குழு வெளியிட்டுள்ள தனது வாராந்த அறிக்கையிலேயே இதுகுறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- கிளிநொச்சியில் கடந்த சில வாரங்களாகப் பெய்த மழை காரணமாக 4,025 ஏக் கர் நெல் வயல்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன என மாவட்டத்தின் அரச அதிபர் தெரிவிக்கின்றார்.

கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவினது பாதுகாப்பு நிலைமை தொடர்ந்தும் பதற்றமானதாகக் காணப்படுகின்றது. வட, தென் முன்னரங்குகளில் தொடர்ந்தும் துப்பாக்கி மோதல்கள் இடம்பெறுகின்றன.

முன்னரங்க நிலைகளிலிருந்து ஆண்டான்குளம், தண்ணீர் முறிப் புக்குளம் மற்றும் நாயாறு பகுதிகளை நோக்கி ஷெல் வீச்சும் இடம்பெறுகின்றது. கிளிநொச்சி மாவட்டத்தினை சேர்ந்த - ஐந்து வயதிற்கும் குறைவான - 500 குழந்தைகள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட் (12ஆம் பக்கம் பார்க்க)

## மடுதேவாலயம் தாக்கப்படும் அச்சம் தவிர்க்கக் கோரி இன்று மௌன ஊர்வலம்

மன்னார்,ஏப்.2

மன்னார்ப் பகுதியில் படையினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் கடும் மோதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதால் மடுத் தேவாலயம் தாக்குதலுக்குள்ளாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக பெரும் அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த இரண்டு தினங்களாக மடுத் தேவாலயப் பகுதியில் ஷெல்கள் தொடர்சியாக வீழ்ந்து வெடித்து வருவதனால் இத்தகைய அச்சநிலை தோன்றியிருக்கிறது.

ஷெல்கள் வீழ்ந்து வெடிப்பதால் தேவாலயப் பகுதியில் இருந்து மக்கள் இடம் பெயர்ந்துள்ளனர். தற்போது மடுத்தேவாலயத்தில் குருமார், கன்னியாஸ்திரிகள் உட்பட மொத்தம் 12 பேர் மாத்திரமே தங்கியுள்ளனர். ஏனையவர்கள் அச்சத்தினால்

(12ஆம் பக்கம் பார்க்க)

## ஆயரின் அவசரக் கோரிக்கை

மன்னார்,ஏப்.2

மடுத் தேவாலயத்துக்கு மதிப்பளிக்கும் வகையிலும் பிரதேசத்தில் அமைதியை நிலைநாட்டும் வகையிலும் இப்பகுதில் மோதல்கள் இடம்பெறுவதை படையினரும் புலிகளும் தவிர்க்கவேண்டும் என்று மன்னார் ஆயர் அதிவண. இராயப்பு யோசப் ஆண்டகை அவசர கோரிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அந்தப் புனிதமான பிரதேசத்தில் மோதல்கள் ஏற்படாது தவிர்க்கப்படவேண்டும் என்பதை உறுதிசெய்ய வேண்டுகிறோம். கத் தோலிக்க மக்கள் புனித மடு மாதா மீது

(12ஆம் பக்கம் பார்க்க)

## 5½ மணிநேரம் தொடர் சண்டை மன்னார் இத்திக்கண்டலில்

வவுனியா,ஏப்.2

மன்னார், இத்திக்கண்டல் பகுதியில் நேற்று படையினர் மேற்கொண்ட முன்னகர்வு நடவடிக்கை 51/2 மணிநேரச் சண்டையின் பின்னர் புலிகளால் முறியடிக்கப்பட்டதாக அவர்கள் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

நேற்றுக் காலை 5.30 மணியளவில் டாங்கிகளின் உதவியுடன் ஆட்லறி மற்றும் மோட்டார் சூட்டாதாரவுடன் படையினர் இத்திக்கண்டலில் இருந்து கறுக்காய்குளம் நோக்கி முன்னகர்வை மேற்கொண்டார்கள்.

இதற்கு எதிராக விடுதலைப் புலிகள் முறியடிப்புத் தாக்குதலை தீவிரமாக நடத்தினர் என்று தெரிவிக்கப்பட்டது.

(12ஆம் பக்கம் பார்க்க)

## மின்னல் தாக்கியதில் நான்கு படையினர் பலி!

கொழும்பு, ஏப்.3

பொலனறுவை மாவட்டம் மின்னேரியாவில் அமைந்துள்ள படையினரின் பயிற் சித் தளப்பகுதியில் நேற்று மின்னல் தாக்கியத்தில் நான்கு படையினர் கொல்லப்பட்டனர். 63 படையினர் காயமடைந்துள்ளனர் என்று இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார தெரிவித்துள்ளார்.

மின்னேரியா கட்டுக் கெலியாவ தரைப் படைப் பயிற்சித்தளத்தில் பிற்பகல் 5 மணியளவில் படையினர் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்த சமயம் பலமான மின்னல் தாக்கியது.

இதன்போது நால்வர் உடல் கருகிப் பலி யாகினர்.

காயமடைந்த 63 பேரும் வைத்திய சாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டிருக்கின்றனர். (சி)

## மு.கா. - ஐ.தே.க. இணைந்து யானைச் சின்னத்தில் போட்டி

### ரணில் - ஹக்கீம் நேற்றுப் புரிந்துணர்வு உடன்படிக்கை

கொழும்பு, ஏப். 02

எதிர்வரும் மாகாணசபைத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸும் ஒன்றிணைந்து ஐக்கிய தேசியக் கட்சியின் யானைச் சின்னத்தில் போட்டியிடத் தீர்மானித்துள்ளன.

இதற்கான இணக்கப்பாட்டில் இரு கட்சிகளினதும் தலைவர்களுமான ரணில் விக்கிரமசிங்கவும், ரவூப் ஹக்கீமும் நேற்றுப் பிற்பகல் ஒப்பமிட்டனர்.

இதேசமயம், கிழக்கு மாகாண சபையின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## குடாநாட்டில் ஜி.சி.ஈ. பெறுபேறுகள் நாளை அல்லது வெள்ளிக்கிழமை

யாழ்ப்பாணம்,ஏப்.2

கடந்த டிசெம்பர் மாதம் நடைபெற்ற ஜி.சி.ஈ. (சாதாரண) தரப் பரீட்சை முடிவுகள் நேற்று பரீட்சைத் திணைக்களத்தால் வெளியிடப்பட்டன.

யாழ்.மாவட்ட பரீட்சார்த்திகளின் முடிவுகள் நாளை அல்லது மறுதினம் யாழ்ப்பாணத்தில் வெளியாகும் என யாழ். கல்வித் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்தன.

கொழும்பு மற்றும் சுற்றுப் புறங்களில் உள்ள பாடசாலைகளுக்கான முடிவுகளை அந்தந்தப் பாடசாலைகளின் அதிபர்கள் நேற்றுப் பெற்றுக் கொண்டனர்.

ஏனைய பிரதேச பாடசாலைகளின்

(12ஆம் பக்கம் பார்க்க)

## புதுக்குடியிருப்பில் விமானத் தாக்குதல்

யாழ்ப்பாணம்,ஏப்.2

விடுதலைப் புலிகளின் இனங்காணப்பட்ட இலக்குகள் மீது நேற்று பிற்பகல் விமானப் படையினர் பெரும் தாக்குதலை நடத்தியுள்ளனர் என்று அறிவிக்கப்பட்டது.

நேற்று பிற்பகல் 4.30 மணியளவில் புதுக் குடியிருப்புப் பிரதேசத்திற்கு 15 கி.மீ தொலைவிலுள்ள முகாம் மீது படையினர் தாக்குதல் நடத்தியுள்ளனர். ஜெட் விமானங்களின் உதவியுடன் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதாக விமானப்படைப் பேச்சாளர் விங் கொமாண்டர் அன்ட்ரூ விஜியசூரிய தெரிவித்துள்ளார்.

(12ஆம் பக்கம் பார்க்க)

## வெளி மாவட்ட பயண அனுமதிக்கு 2 பிரதிகள் போதும்

யாழ்ப்பாணம்,ஏப்.2

குடாநாட்டில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு பயணம் மேற்கொள்வோர், பயண அனுமதியைப் பெறுவதற்கான விண்ணப்பப் பத்திரங்களின் இரண்டு பிரதிகள் மட்டும் சமர்ப்பித்தால் போதுமானது.

யாழ்.சிவில் நிர்வாக அலுவலகம் இத் தகவலை அறிவித்துள்ளது.

இந்த நடைமுறை நேற்று முதல் அமுலுக்கு வந்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

பயண அனுமதிக்கு விண்ணப்பிப்போர் இதுவரை நான்கு பிரதிகளைச் சமர்ப்பித்து வந்தனர். (அ-1)

# 17 மனித நேயப் பணியாளர்களின் படுகொலைகளுக்கு சூத்திரதாரிகள் முஸ்லிம் ஊர்காவலரும் பொலிஸாருமே!

## பல்கலைக்கழக ஆசிரியர் மனித உரிமை அமைப்பு அறிக்கை

கொழும்பு,ஏப்.2

மூதூரில் 2006 ஆம் ஆண்டு அரச சார்பற்ற அமைப்பின் பணியாளர்கள் 17 பேர் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கு முஸ்லிம் ஊர்காவலர் ஒருவரும், பொலிஸார் சிலரும் காரணமென மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி மனிதாபிமானப் பணியாளர்களை, பொலிஸார் உட்படப் பாதுகாப்புப் படையினரே கொலை செய்தனர் என்பதற்கும் மூத்த பொலிஸ் அதிகாரிகள் அதனை மூடி மறைத்தனர் என்பதற்கும் சாட்சியங்கள் உள்ளன - என்றும் அந்த அமைப்புத் தெரிவித்துள்ளது.

குறிப்பிட்ட சம்பவத்திற்கு சில நாள்களுக்கு முன்னர் விடுதலைப் புலிகளின் தாக்குதலில் தனது சகோதரரை இழந்த முஸ்லிம் ஊர்காவலர் ஒருவரே இப்படுகொலை விவகாரத்தில் முக்கிய சூத்திரதாரியெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் இந்த அறிக்கையை அற்புதமான புலனாய்வுப் பணி என வரவேற்றுள்ளது.

மனிதாபிமானப் பணியாளர்களின் படுகொலைக்குக் காரணமானவர்களின் பெயர்கள் இந்த அறிக்கையில் அம்பலப்படுத்தப்பட்டுள்ளமையை அது சுட்டிக்காட்டியுள்ளது.

இலங்கை அரசு விசாரணை என்ற பெயரில் வேடிக்கை விளையாட்டில் ஈடுபட்டமையையும் இது புலப்படுத்தியுள்ளதாக

(12ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த நாளிதழ்

# மனோதத்துவ வைத்தியம்
## (CENERAL PSYCHOTHERAPHY)

*பிரபல மனோதத்துவ நிபுணர்* **Dr.P.ஆறுமுகம்**

அவர்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வருகின்றார். மருந்துகள் குறிப்பிட்டளவே கொண்டுவரமுடியும் என்பதால் சம்பந்தப்பட்ட நோயாளர்கள் தங்களுடைய பாதிப்புக்களை உடனே தொலைபேசியில் (0777-569205, 0652224019) தொடர்பு கொண்டால் அவர்களுக்கேற்றவாறு மருந்துகளைக் கொண்டு வருவார். ஏப்ரல் 7ஆம் திகதி முதல் சிலநாள்கள் மட்டுமே யாழ்ப்பாணத்தில் இருப்பார்.

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்மா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளை போகுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல்முரசு கரைதல் போன்ற நோய்களுக்கும் வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவும், கல்வியில் நாட்டம் குன்றி பயம், நடுக்கம், நரம்புத்தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாக காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்கமுடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களை சந்தியுங்கள்.

Sexual Disorders (ஆண்மைச் சக்தி குறைவு)

(பிறவியிலே ஆண்மையற்றவர்களை தவிர) எவ்வித மோசமான தாம்பத்தியத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும், திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

*யாழ்ப்பாணத்தில்*
*ஏப்ரல் 07 ஆம் திகதிமுதல் சிலநாள்கள் மட்டும்*
ASN சுற்றுலா விடுதி, 392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
Contact No: 0777 569205, 021 222 5399, 2417 (சி/552087)


# தென்மராட்சியில் கணித பாட மதிப்பீடு

யாழ்ப்பாணம்,ஏப்.2

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 9 வகுப்பு மாணவர்களுக்கான கணித பாட மதிப்பீடு - 3, தரம் 11 வகுப்பு மாணவர்களுக்கான கணித பாட மதிப்பீடு -4 ஆகியவை நாளை வியாழக்கிழமை நடைபெறுமென வலயக் கல்விப் பணிப்பாளர் கு.பிரேமகாந்தன் அறிவித்துள்ளார்.(1-207)

# மீள் எழுச்சித்திட்ட அறிமுகம்

யாழ்ப்பாணம்,ஏப்.2

மீள்எழுச்சித்திட்டத்தின் அறிமுக நிகழ்வு நாளை வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தின் கேட்போர்கூடத்தில் இடம்பெறவுள்ளது.

மீள் எழுச்சித்திட்டம் தொடர்பான விளக்கம் இந்நிகழ்வில் வழங்கப்படும். (1)

# கலைப்பீட மாணவர் கலந்துரையாடல்

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட அனைத்து வருட மாணவர்களுக்கும் நுண்கலைத்துறையின் அனைத்துத்துறை மாணவர்களுக்குமான அவசர கலந்துரையாடல் இன்று புதன் கிழமை மு.ப. 10 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளது.

மாணவர் நலன் தொடர்பான முக்கிய தீர்மானங்கள் எடுக்கப்படவுள்ளதால் அனைத்து மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு கலைப்பீட மாணவர் ஒன்றியம் கேட்டுள்ளது.

# உதைபந்தாட்டம்

வலி.வடக்கு,ஏப்.2

வலிதெற்கு உடுவில் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடைபெறும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டியில் இன்று பிற்பகல் 3 மணிக்கு சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:

* ஏழாலை கண்ணகி வி.க. எதிர் உடுவில் மத்தி வி.க.
* இணுவில் கலையொளி வி.க. எதிர் குப்பிளான் விக்கினேஸ்வரா வி.க. (1-86)

# காங்கேசன் தபாலகம் இணுவிலுக்கு மாற்றம்

யாழ்ப்பாணம்,ஏப்.2

காங்கேசன்தறை தபாலகம் இன்று புதன் கிழமை தொடக்கம் இணுவிலில், கே.கே. எஸ் வீதியில் இயங்கவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுவரை இந்தத் தபாற்கந்தோர் உடுவில் கிழக்கில், கே.கே.எஸ். வீதியில் இயங்கி வந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

# வவுனியா கல்வியியல் கல்லூரிக்கு மேலும் 12 பேருக்கு அனுமதி

யாழ்ப்பாணம்,ஏப்.2

வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி அனுமதியில் காத்திருப்போர் பட்டியலில் இருந்து யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மேலும் 12 மாணவர்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது என்று யாழ்.தேசியக் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி அறிவித்துள்ளார்.

அனுமதிக்கு தெரிவு செய்யப்பட்டவர்களின் விவரம் வருமாறு:

உடற்கல்வி - ந.துவாரகா (கரணவாய்), ப.பாலசங்கர் (துன்னாலை), ஞா.தர்சினி (துன்னாலை), பூ.மிதிலா (அளவெட்டி), கு.தனுசியா (யாழ்ப்பாணம்), த.ஜனார்த்தன் (வேலணை), ஞா.அருள்ராஜா (நெடுந்தீவு),

இந்துசமயம் - என்.சசிகரன் (நீர்வேலி), வை.ஜெகநாதன் (ஏழாலை), ஜி.கிருஷாந்தி (மானிப்பாய்),

தகவல் தொழில்நுட்பம் - ஆர்.தாரணி (சாவகச்சேரி), ரி.ரதிகரன் (இளவாலை),

இவர்களுக்கான படிவங்களை உடனடியாக யாழ்.தேசிய கல்வியல் கல்லூரியில் பெற்று பதிவு செய்யுமாறு பீடாதிபதி எஸ். கே.யோகநாதன் கேட்டுள்ளார். (1-202)

# 2ஆம் ஆண்டு நினைவலைகள்



## சலமோன் அந்தோனிப்பிள்ளை

தோற்றம் 24.10.1924 — மறைவு 02.04.2006

அன்பின் சிகரமாய் பாசத்தின் உறைவிடமாய் வாழ்ந்த எமது அன்புத் தெய்வமே ஆண்டுகள் இரண்டு சென்றாலும் உங்கள் திருவுருவமும் நினைவும் எம்மை விட்டு நீங்கவில்லையே. உங்கள் ஆத்மா சாந்தி பெற இறைவனை வேண்டுகின்றோம்.

*58, கோவில் வீதி,*
*யாழ்ப்பாணம்.*
T.P:0212229361

மனைவி,
பிள்ளைகள், மருமகள்,
மருமகன், பேரப்பிள்ளைகள்.
(72675)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி சின்னையா ஈஸ்வரி



சண்டிலிப்பாய் மத்தியைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் வடக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சின்னையா ஈஸ்வரி நேற்று (01.04.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் சின்னையாவின் மனைவியும், காலஞ்சென்றவர்களான செந்தாமரைச் செல்வி, இரவிவேந்தன் (ஜேர்மன்) ஆகியோரின் அன்புத் தாயாரும், விமலேஸ்வரியின் (ஜேர்மனி) அன்பு மாமியும், செந்தூரனின் (ஜேர்மனி) அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2008) புதன் கிழமை அவரது இல்லத்தில் பி.ப. 1 மணிக்கு நடைபெற்று பூதவுடல் இருளன் மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*உரும்பிராய் வடக்கு,*
*உரும்பிராய்.*
*தொ.பே. 021 4591520* (72674)

தகவல்:
சின்னையா
(கணவர்)

## கார்த்திகேசு சின்னத்துரை

(ஒய்வுபெற்ற தலைமை ஆசிரியர், கோயிற் புளியங்குளம் முத்தமிழ் வித்தியாலயம், வவுனியா, ஆசிரியர் - நடேஸ்வரக் கல்லூரி, காங்கேசன்துறை, வட்டு. திருநாவுக்கரசு மகா வித்தியாலயம், பிளவத்தை - அ.மி.த.க. பாடசாலை )



மாவிட்டபுரத்தை பூர்வீகமாகவும், சுதுமலை தெற்கு, ஆனைக்கோட்டையை தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட கார்த்திகேசு சின்னத்துரை அவர்கள் நேற்று (01.04.2008) செவ்வாய்க்கிழமை அமரத்துவம் அடைந்துவிட்டார்.

அன்னார் ஆச்சிமுத்துவின் அன்புக் கணவரும் ஸ்கந்தவதனி, கார்த்திகேஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் அருளானந்தத்தின் அன்பு மாமனாரும் சகானாவின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2008) புதன் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணியளவில் கரையாம்பிட்டி இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நிரந்தர முகவரி:
*மதவடி லேன், மாவிட்டபுரம்.*
தற்காலிக முகவரி:
*சுதுமலை தெற்கு, மானிப்பாய்.* (72676)

தகவல்:
சி.கார்த்திகேஜன்(மகன்),
மி.மாணிக்கவாசகர்
(மைத்துனர்)

## சிதம்பரப்பிள்ளை இளையதம்பி

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் நவாலியை வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை இளையதம்பி 31.03.2008 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொற்கொடியின் அன்புக் கணவரும் செல்லக்கிளி, செல்லப் பாக்கியம், சிவஸ்ரீ சபாரத்தினசிவம், சரஸ்வதி, மகேஸ்வரி ஆகியோரின் பாசமிகு தந்தையும் அமரர் வரப்பிரசிங்கம் மற்றும் திருஞானம், கணேஸ்வரி, சிவநேசன், துரைரத்தினம் ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று (01.04.2008) செவ்வாய்க்கிழமை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நவாலி.*
(72654)

தகவல்:
சிவஸ்ரீ சபாரத்தினசிவம் (மகன்),
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.


# துரித தபால்கள் பொதிகள் சேவை

மலரும் புத்தாண்டை முன்னிட்டு
மீண்டும் எமது வாடிக்கையாளர்களுக்கு 10% - 20%
வரையான பொதிகளுக்கு விசேட விலைக் கழிவு

FedEx Express

லண்டனுக்கு அனுப்பப்படும்
5 Kg பொதிகளுக்கு மிகக்குறைந்த
கட்டணத்தில் விசேட சலுகை
1-Kg-900/=

உள்நாடு, வெளிநாடுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருள்கள், உணவுப் பொருள்கள், உடுபுடவைகள் மற்றும் VDO பிரதிகள், CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்.

நீங்கள் குறிப்பிடும் எந்த முகவரியிலும் ஒப்படைக்கப்படும்

உலகின் எந்தப் பாகத்திலிருந்தும் சில மணிநேரங்களில் மிக விரைவாகப் பணத்தைப் பெற்றுக்கொள்ள

WESTERN UNION

[ உங்களுக்காக விடுமுறை நாட்களிலும்!]

## திருமுருகன் கொம் நெற்

259, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொ.பே. 021 222 7835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ் முன்பாக)
ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி. தொ.பே. 021 222 7310 (நல்லூர் ப.நோ.கூ. சங்கம் முன்பாக)


# கண்ணீர் அஞ்சலி

*எமது கிளை அங்கத்தவர்களான கணபதி பேக்கரி உரிமையாளர் திருமதி வசந்தகுமாரி அவர்களின் மாமனாரும், சதா பேக்கரி உரிமையாளர் திருமதி இராஜேஸ்வரி அவர்களின் அன்புத் தந்தையுமாகிய*

## அமரர் கந்தையா செல்லக்குட்டி

அவர்களிற்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

அங்கத்தவர்கள்,
நல்லூர், கோப்பாய் கிளை
யா.மா.பே.உ. சங்கம்.

(சி/552091)

# கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலையின்
முன்னாள் ஆசிரியை

## திருமதி பொன்னம்மா இரத்தினம்

அவர்களின் மறைவையிட்டு துயரடைவதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்தித்து அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

யா/நீர்வேலி
சி.சி.த.க.பாடசாலை
நீர்வேலி. (72672)

அதிபர், ஆசிரியர்கள்,
மாணவர்கள்.

# கண்ணீர் அஞ்சலி

இளைப்பாறிய அதிபரும் பிரபல சமூக சேவையாளருமாகிய

## சுப்பிரமணியம் ஜோசப் பூராசா



அவர்கள் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகிறோம்.
அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(72660)

*கொக்குவில்.* பேராசிரியர் கா. குகபாலன் குடும்பத்தினர்


# மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

மிகவும் நல்ல நிலையிலுள்ளதும் எனது முதற் பதிவிலுமுள்ளதுமான மோட்டார் சைக்கிள் (CD 125 HONDA) விற்பனைக்குண்டு.

**தொடர்பு:** இல 42, குருசோ வீதி, கண்டுக்குளி, யாழ்ப்பாணம்.T.P:2228569
*(பி.பகல் 3.00 மணிக்குப் பின்)*


# தவறிவிட்டது

யாழ்ப்பாணத்திற்கும் பருத்தித்துறைக்கும் இடையில் பயணத்தின் போது 15 Kg நிறையுடைய மாஜரின் பெட்டி ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் எஸ்.விஜயகுமார், கிஷோனி [illegible] பருத்தித்துறை என்னும் விலாசத்துடன் தொடர்புகொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். ([illegible]54)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பூமியைத் தாக்கவரும் அணுகுண்டுகளாய் குறுங்கோள்கள்

அண்டவெளியில் எண்ணற்ற கோள்கள் சுற்றி வருகின்றன.

அவற்றில் சூரியன், சந்திரன், வியாழன் போன்ற கோள்கள் நம் கண்களுக்குத் தெரிந்தவை.

இதற்கு அப்பால் ஆயிரக்கணக்கான சூரியன்களும், சந்திரன்களும் இருப்பதாக அறிவியலாளர்கள் கூறுகிறார்கள்.

இதற்கிடையே ஒருகிலோ மீற்றர், 2 கிலோ மீற்றர் சுற்றளவு உள்ள குறுங்கோள்களும் அண்ட வெளியில் சுற்றி வருகின்றன. இப்படி சுற்றி வருகின்ற கோள்கள் சில நேரங்களில் தடம் மாறி பூமியில் விழுகின்றன. அப்படி விழுகின்ற பொழுது பல அடி ஆழத்திற்கு பூமியில் பள்ளம் ஏற்படுவது உண்டு.

ஒரு பள்ளம் தோண்டுவதற்கு லட்சக் கணக்கான தொழிலாளர்கள் செய்ய வேண்டிய வேலையை ஒரு குட்டிக் கோள் பூமியில் விழுந்து செய்து விடும்.

சைபீரியாவில் துங்கு இஸ்கா என்றபகுதி இருக்கிறது. இது நீர் வளம் இல்லாத பாலை வனமாகும். கி.பி. 1908 ஆம் ஆண்டு இந்த இடத்தில் ஒரு விண்கல் விழ்ந்தது.

அதற்குப்பிறகு மற்றுமொரு குறுங்கோள் பூமியில் விழப்போகிறது என்ற பயத்தைப் பத்திரிகைகள் மக்களிடை யே ஏற்படுத்தின.

இது 1968 ஆம் ஆண்டில் நடந்தது. இப்படி பூமியில் மோதப்போவதாக அச்சுறுத்தப்பட்ட குறுங்கோளின் பெயர் 1566 இகாராஸ் (1556 ICARUS) என்பதாகும்.

ஆனால் நல்ல வேளையாக அந்தக் குறுங்கோள் பூமியைப் பதம் பார்க்கவில்லை.

அதேமாதிரி 1989 ஆம் ஆண்டு மிகப் பெரிய ஆபத்து பூமிக்கு ஏற்படவிருந்தது. 1989 எப்.சி என்ற குறங்கோள் பூமிக்கு மிக அருகே வந்தது.

பூமியிலிருந்து 6 லட்சத்து ஆயிரத்து 870 கிலோமீற்றர் தூரத்தில் இது கடந்து சென்றது. பார்ப்பதற்கு இது நீண்ட தொலைவுபோல் தெரியும்.

ஆனால் விண்வெளி தூரத்தைப் பொறுத்த வரை இது மிகச் சிறிய இடைவெளிதான்.

ஒருவேளை இந்த குறுங்கோள் பூமியை மோதியிருந்தால் பூமி பாதி அப்பளம் போல் நொறுங்கி போயிருக்கும்.

உயிரினங்கள் வாழ்வதற்கு சாத்தியம் இல்லாத நிலை ஏற்பட்டிருக்கும்.

மிகப் பெரிய உயிரினங்கள் என்று சொல்லக்கூடிய டைனோசர்கள் அழிந்ததற்கும் விண்கல் மோதல்தான் காரணமென்று அறிவியல் ஆய்வாளர்கள் குறிப்பிடுகிறார்கள்.

தூசியும் துகள்களும் கொஞ்சம் கொஞ்சமாக ஒன்று சேர்ந்து உருண்டு திரண்டு குளிர்ந்துபோய் இந்த குறுங்கோள்கள் உருவாகி இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

குறுங்கோள் வீதியில் வலம் வந்து கொண்டிருக்கும் கோளங்கள், கற்பாறைகள் குறித்து இயன்றவரை ஆய்வுகள் செய்யப் பட்டிருக்கின்றன. தகவல்கள் திரட்டப்பட்டிருக்கின்றன. இந்தக் குறுங்கோள்களை ஒன்பது வகையாகப் பிரித்திருக்கிறார்கள்.

காபன் எனப்படும் ஆங்கிலச் சொல்லின் முதல் எழுத்தான C ஐ குறியிட்டுப் பெயராக விஞ்ஞானிகள் வைத்திருக்கிறார்கள்

இரும்பு கலந்த கற்களை S என்ற முதல் எழுத்தைக் கொண்டு அழைக்கிறார்கள்.

இரும்பு, உலோகம் கலந்த கற்களை M என்று குறிப்பிடுகிறார்கள். வெண் மணல் கலந்து பிரகாசமாக இருக்கும் குறுங்கோளை E என்று அழைக்கிறார்கள்.

சிவப்பு நிற இரும்பு ஒட்சைட் கொண்ட செங்கோளை R என்றும், என்ன கனிமம் கலந்திருக்கிறது என்று அறியப்படாத குறுங்கோளை U என்றும் குறிப்பிடுகிறார்கள்.

பூமிக்கும் சுக்கிரனுக்கும் இடையே சுற்றிக் கொண்டிருக்கும் குறுங்கோள்களை ஏடல் என்று அழைக்கிறார்கள்.


அதேபோல் பூமிக்கும் செவ்வாய்க்கும் இடையில் ஓடுகின்ற குறுங்கோள்களை அப்போலோ என்றும், பூமிக்கும் செவ்வாய்க்கும் இடைப்பட்ட பகுதியில் மட்டும் இயங்கி வருகின்ற குறுங்கோளை அமோர் என்றும் அழைக்கிறார்கள்.

பூமியின் அருகே சுற்றி வருகின்ற குறுங்கோளைப் பற்றி பல உண்மைகள் கண்டறியப்பட்டாலும் அதற்கு அப்பால் சூரியன், வியாழன் போன்ற கிரகங்களுக்கு இடையே ஓடுகின்ற குறுங்கோள்களைப் பற்றிய விவரங்களைத் திரட்டுவதில் விஞ்ஞானிகள் சிரமத்தை எதிர்நோக்கி இருக்கிறார்கள்.

சூரியனைச் சுற்றி வருகின்ற கோள்களுக்குச் சந்திரன்கள் உண்டு என்பது நாம் அறிந்ததுதான்.

இடா என்ற குட்டிக் கோளுக்கு ஒன்றரை கிலோ மீற்றர் குறுக்களவு உள்ள சின்னச் சின்னத் துணைக் கோள்கள் இருப்பதும் கண்டு பிடிக்கப்பட்டது.

28.08.1993 இல் கண்டுபிடிக்கப்பட்ட இந்தக் குட்டித் துணைக் கோள்கள் விண்வெளி அதிசயம் என்று கருதப்படுகிறது.




## அண்டத்தில் அவை ஒன்பது வகைகள்

அதே நேரத்தில் அண்டவெளியில் வலம் வருகின்ற குட்டிக் கோள்களால் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் பூமிக்கு ஆபத்து ஏற்படலாம் என்று விஞ்ஞானிகள் எதிர்பார்க்கிறார்கள்.

இருந்தாலும் இயற்கை இந்த ஆபத்திலிருந்து பூமியைக் காப்பாற்றி விடும் என்று அவர்கள் நம்புகிறார்கள்.

★★★★★★★★★★★★★★★★★★



# குழந்தைகள் தமக்குத் தாமே பேசுவது அவர்களின் செயல்திறனை அதிகரிக்கும்

குழந்தைகளின் பழக்க வழக்கங்கள் குறித்து அமெரிக்காவைச் சேர்ந்த ஆராய்ச்சியாளர்கள் ஆய்வு நடத்தினர். அதில் சில புதிய தகவல்கள் வெளியாகி உள்ளன.

பெரும்பாலான குழந்தைகளுக்குத் தமக்குத் தாமே பேசிக்கொள்ளும் பழக்கம் உள்ளது. இப்படிப் பேசும் குழந்தைகளை ஆசிரியர்கள், பெற்றோர்கள் திட்டுவார்கள். ஆனால் அப்படிச் செய்யத் தேவையில்லை. அந்தக் குழந்தைகளுக்கு ஏதோ ஆகிவிட்டதோ என்று அஞ்சத்தேவையில்லை. தனக்குத் தானே பேசிக்கொள்வது குழந்தையின் வளர்ச்சிக்கு உதவுகிறது. அந்தக் குழந்தையின் செயல்திறன் மற்றக் குழந்தைகளை விட அதிகமாக இருப்பது ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது.



"ஆசிரியர்கள், மாணவர்களின் மூளையை கூர்மைப்படுத்திவிடுவதோடு, அவர்களின் இதயங்களையும் பக்குவப்படுத்தி விடட்டும். ஏமாற்றத்தையும், ஏக்கத்தையும் அவர்கள் அகராதியில் இருந்து துடைத்தெறிந்துவிட உதவி புரிய வேண்டும்" என்கிறார் மகாத்மா காந்தி.



# காற்று: அதன் வடிவம் என்ன?

இட்டைகள், சந்துகள், வெடிப்புகள் காலியான பாத்திரங்கள், ஏன் வானவெளியும் கூட காற்றினால் நிரம்பிக் கிடக்கின்றன.

காற்றைக் கண்ணால் பார்க்க முடியாது, சுவைக்க முடியாது, காற்று வீசும் போது தவிர உணரவும் முடியாது. விஞ்ஞானிகள் அதனை ஒரு பொருள் (Matter) என்று அழைக்கிறார்கள். அது திடப் பொருளாகவிருக்கலாம், நீர்ப் பதார்த்தமாக அல்லது வாயுப் பொருளாகவும் இருக்கலாம்.

உண்மை என்னவென்றால் அது சில வாயுக்களாலான ஒரு பொருள். அவை எப்பொழுதுமே ஒரே அளவிலேயே காணப்படும். சுமார் 78 வீதம் நைதரசன் சுமார் 21 வீதம் ஒட்சிசன் மேலும் சிறிய அளவில் காபன் டையோக்சைட்டும் காணப்படும். இது உயிரினங்களிடமிருந்து வெளிப்பட்டு கலக்கப்படுகின்றது. இன்னும் ஒரு சதவீதம் வேறுபல வாயுக்கள் கலக்கப்படுகின்றன. எனவே பூமியைச் சுற்றிய மேற்பரப்பு வேற்றுப் பொருள் எதுவும் இல்லாது போனாலும் காற்றினால் நிரம்பியுள்ளது. இந்தக்காற்று வெளியேறிவிடாமல் பூமியின் ஈர்ப்புவிசை ஈர்த்து வைத்துள்ளது. இந்த வகையில் காற்றுக்கு அழுத்தம் உண்டு என்பது தெளிவாகின்றது. நாங்கள் ஆழ்கடலுக்குள் நின்றால் நீரானது எம்மை எல்லா பக்கங்களிலும் அழுத்துவது போன்று காற்றும் எல்லா பக்கங்களிலும் அழுத்திக் கொண்டிருக்கின்றது. பூமிக்கு மேல்புறத்தில் சுமார் 62 மைலுக்குமேல் பெரும்பாலும் அங்கு அழுத்தம் இருப்பதில்லை. உயர்ந்த மலைகளில் ஏறிச்சென்றால், விமானத்தில் நாம் அதிக உயரத்தில் பறந்தால் அங்கு காற்றழுத்தம் குறைவாகவே காணப்படும்.

★★★★★★★★★★★★★★

## புதன் பொய்கை

# கடும் சொல் கலக்கி விடும்



கண்ணம்மா என் காதலி என்னும் தலைப்பின் கீழ் "வார்த்தை தவறிவிட்டாய் கண்ணம்மா! என் மார்பு துடிக்கிறது" என்று பாரதியார் காதல் ஏக்கத்தை வெளிப்படுத்துவதை ஒருகணம் நோக்குக. மார்பு வேகமாகத் துடித்தால் மரணத்தில் போய் முடியும். வார்த்தையைக் காப்பாற்றாமையால் வந்த வினை இது என்றல்லவா கூற முடியும்.

ஏன்? ஓர் ஐந்தறிவுள்ள மிருகமான நாயைக் கடுஞ்சொல்லால் மிரட்டினால் எப்படி பயந்து, சோர்ந்து, பதுங்கி, ஒதுங்குகிறது என்பது எல்லோரும் அறிந்த ஒன்று. அதே நாய்க்கு அன்பான வார்த்தைகளால் அமைதியான அன்பான தொனியில் சொல்லும்போது வாலை ஆட்டிக் கொண்டு இனிய இராகத்தில் ஊளையிட்டு எஜமானின் மேல் துள்ளிக் குதிக்கிறது.

இந்த ஐந்தறிவுள்ள நாய்க்கே கடுஞ்சொல் கலக்குகிறது என்றால் ஆறறிவுள்ள சிந்திக்கத் தெரிந்த மனித மனத்துக்கு எப்படி இருக்கும்? ஒருவர் வாயிலிருந்து பிறக்கும் இனிமையான வார்த்தைகளுக்கும் கடுமையான வார்த்தைகளுக்கும் காரணம் என்ன?

நாக்கு ஒன்றுதான். அது ஏன் மாறி மாறி இரண்டு பக்கமும் பிறழ்கிறது? பேசுவோனின் மனோநிலையே இதற்குக் காரணம். கோபம், பொறாமை, வெறுப்பு, சகிப்புத் தன்மை இன்மை என்பவை ஒரு மனதில் இருந்தால் வன்சொற்களே வாயிலிருந்து உதிர்கின்றன. சந்தோஷம், அமைதி, நிம்மதி, பொறுமை, அன்பு என்பன ஒருவரின் மனதில் இருக்கும்போது இதமான இன் சொற்கள் இதயத்தில் ஊற்றெடுத்து வாய்வழி வெளிப்படுகின்றன.★★★★★★★★★★★★★★★★★★★★★★★★



# அத்திமரத்தின் பூக்கள் எங்கே?



உலகிலுள்ள மிக விசித்திரமானதும் அதிசயமானதுமான ஒரு பழம் இருக்குமானால் அது அத்திப் பழமாகவே இருக்கும்.

'அத்தி பூத்தாப்போல்' என்றொரு பழமொழி தமிழில் உண்டு.


அத்திமரம் பூப்பதில்லையென்பதல்ல அதன் கருத்து, அத்திப் பூவானது வெளியில் தெரிவதில்லை. அவ்வளவுதான்.

சரித்திர காலத்துக்கு முன்பிருந்தே அத்திப் பழம் உணவாகப் பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. ஒரு காலத்தில் அரசர்கள் இப் பழத்தை விரும்பி உண்டதாகவும், பின்னொருகாலத்தில் அடிமைகளின் முக்கிய உணவாகவும் இது கருதப்பட்டதாகவும் தெரிகின்றது. அத்தியின் சாறிலிருந்து மதுசாரம், வைன், உடைகளுக்கான சாயம் முதலியவை தயாரிக்கப்படுகின்றன. அத்திமரத்தின் பட்டையிலிருந்து கயிறு திரிக்கப்படுகின்றது.

அத்தியில் பல வகை உண்டு. ஆனால் சிமிர்னா (Smyrna) வகையே ருசியானதும் பலருக்கும் தெரிந்ததுமாகும். துருக்கியிலுள்ள ஒரு நகரத்தின் பெயரைக் கொண்டு இப் பெயர் இடப்பட்டதாம். மேற்கு நாடுகளில் இது பரவலாகப் பயிரிடப்படுவதாகத் தெரிகின்றது. அத்திப் பழத்தைப் பார்த்தால் ஒரு சிறு பைபோல அது தோற்றமளிக்கும். உள்பக்கத்தில் செறிவான - உண்மையான பூக்கள் காணப்படும்.

இப்பூக்களே மகரந்தத்தையும் விதைகளையும் உற்பத்தி செய்கின்றன. இந்த விதைகளே அத்தியின் உண்மையான பழப்பகுதியாகும்.

சிமிர்னா அத்திப் பயிர் செய்கையில் ஒரு ருசிகரமான நடைமுறை கைக்கொள்ளப் படுகின்றது. இந்தவகை அத்தியானது 'காப்ரி' (Capri) என்றழைக்கப்படும். இன்னொரு வகை அத்தியின் மூலமே மகரந்தச் சேர்க்கைக்குட் படுத்தப்படுகின்றது. காப்ரி பூவில் நிறைய மகரந்தம் காணப்பட்டாலும் சிமிர்னா அத்தியை அது சென்றடைவதற்கு ஒரு நுண்ணிய குளவிபோன்ற வண்டினமே உதவி புரிகின்றன. இவ்வண்டு காப்ரி பழத்திலேயே முட்டையிடும் பருவம்வரை வாசம் செய்கின்றது. இப்பருவம் வந்ததும் இச்சிறிய வண்டு 'காப்ரி' அத்தியைவிட்டு வெளியேறுகின்றது. அவ்வாறு வெளியேறும்போது தன்னுடலில் 'காப்ரி' மகரந்தப் பொடியையும் கொண்டு செல்கின்றது. பின் 'சிமிர்னா' அத்திப் பழத்தில் நுழைந்து அங்கு மகரந்தத்தை உதிர்த்து விடுகின்றது.



*************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிழக்கு மாகாணத் தேர்தலை முன்னிட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது

கிழக்கு மாகாணத்தில் இடம்பெறவுள்ள தேர்தலை முன்னிட்டு திருகோணமலை மாவட்டத்தின் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளது.

தேர்தலை முன்னிட்டு 3 ஆயிரம் பொலிஸார் மேலதிகமாக சேவையில் இணைக்கப்பட்டுள்ளனர்.

இன்னும் மேலதிகமாக ஆயிரம்பேர் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட உள்ளதாகத் திருகோணமலை மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் என்.ஏ.ஜெயசாத் தெரிவித்துள்ளர். (203)



கிராமிய கைத்தொழில் மற்றும் சுயதொழில் அபிவிருத்தி அமைச்சும் கைத்தொழில் அபிவிருத்திசபையும் இணைந்து நாடளாவியரீதியில் நடத்திய சிறந்த தொழில் முயற்சியாளருக்கான தெரிவில் 2007 ஆம் ஆண்டில் அகில இலங்கையில் மாகாண மட்டத் தெரிவில் முதலாம்இடத்தைப் பெற்றவர்களுக்கான விருதுவழங்கல் நிகழ்வு நாளை கொழும்பு பண்டார நாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் குறிப்பிட்ட துறையில் தெரிவு செய்யப்பட்டவர்கள் 10 ஆயிரம் ரூபா பணப்பரிசில் வழங்கிக் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மேற்படி நிகழ்விற்கு வட மாகா ணத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்டவர்களுள் யாழ்ப்பாணத்தில் இருந்து 12 பேர் செல்லவுள்ளனர்.

தெரிவு செய்யப்பட்ட சோமசேகரன் ககனானந்தா(மைக்ரோ பி சி சிஸ்ரம்), கனகசபை பூரணச்சந்திரன் (ஸ்ரார் இண்டஸ்ரியல் சேர்விசஸ் பிரைவேற் லிமிற்றெட்), சுப்பிரமணிய ஆசாரி பாஸ்கரன் ஆசாரி(கனிப்பொருள் இரசாயனம் சார்ந்த கைத்தொழில்), எஸ்.ராஜ்குமார்(கரிகனைன் பிறின்டேர்ஸ்), தோமஸ் கிறிஸ்ரின் செல்வராஜன்( நியூட்டா இண்டஸ்ரி), சுப்பிரமணியம் நிமலேந்திரன்(நாயகி புரடக்ஸ்), அம்பிகைபாலன் மோகனராஜன்(சாம் கட்டடப் பொருள் உற்பத்தி விற்பனை நிலையம்), சின்னத்தம்பி அமரசிங்கம்(மரம்சார் உற்பத்திப் பொருள்), வசந்தன் கணேஸ்வரி(திசோ தையலகம்), சிவதாசா சந்திரமேனன்(தோற்பொருள் உற்பத்தி), நடராஜா ஸ்ரீ ஆனந்தராஜன்(சுயதொழில்), அகஸ்ரின் வேதானந்தம்(ஆனந்தி அன்கோ) ஆகியோர் யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் மற்றும் அதிகாரிகளுடன் எடுத்துக்கொண்ட படம். (203)

# திருமண வயதை அதிகரித்து விடுதலைப் புலிகள் மனித உரிமைகளை மீறுவதாக படையினர் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், ஏப்.02

ஐந்து பிள்ளைகள் உள்ள குடும்பத்தில் இரண்டு பேரை வலுக்கட்டாயமாக தமது இயக்கத்தில் இணைத்துக் கொள்கிறார்கள் என்றும்-

முப்பது வயதுக்குக் கீழ்ப்பட்டவர்கள் திருமணம் செய்யக்கூடாது என்று தடை விதித்திருக்கிறார்கள் என்றும்-

இராணுவத்தினர் விடுதலைப்புலிகள் மீது குற்றம்சாட்டியுள்ளனர். இது குறித்து பலாலியில் உள்ள பாது காப்புத் தலைமையகம் விடுத்துள்ள ஓர் அறிக்கையிலேயே மேற்கண்டவாறு குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் வாழும் 30 வயதுக்கு கீழ்ப்பட்ட இருபாலரும் திருமணம் செய்வது தடை செய்யப்பட்டுள்ளது. அவர்கள்திருமணம்செய்வதற்கான வயதெல்லை 30 வயதுக்கும் மேலாகவென நிர்ணயிக்கப்பட்டுள்ளது. திருமணம்செய்யக் கூடிய சிறந்த வயதாக 20 இற்கும் 30 இற்கும் இடைப்பட்ட வயதென கருதப்பட்டாலும் அந்த உரிமை அவர்களிடமிருந்து பறிக்கப் பட்டுள்ளது.

புலிகளின் ஆள்பலம் எந்தளவு குன்றியுள்ளது என் பதை மேற்படி செயற்பாடுகள் புலப்படுகின்றது. மேலும் அங்கு வாழும் ஒவ்வொரு குடும்பத்தில் இருந்தும் ஒருவர் கட்டாயம் இயக்கத்தில் இணைய வேண்டும் என்பதுடன் 5 பிள்ளைகளுக்கு மேற்பட்ட குடும்பம் ஒன்றிலிருந்து இருவரைக் கட்டாயம் இயக்கத்திடம் ஒப்படைக்க வேண்டும் என்று பலவந்தமாக இணைத்துக் கொள்ளப்படுகின்றனர். அவ்வாறு இணைக்கப்படும் இளைஞர் யுவதிகளுக்கும் கல்வி பயிலும் இளம் பராயத்தினருக்கும்புலிகள்வழங்கும் உறுதிமொழியானது மரணச்சான்றிதழாகும். உலகில் வேறெந்த நாட்டிலும் இவ்வாறு மனித உரிமைகளை மீறும் மனிதச் சுதந்திரத்தைத் தடுக்கும் வேறு இயக்கமொன்றைக் காண்பது அரிது. அப்பாவித் தமிழர்களை கேடயங்களாகப் பாவித்து அவர்களை இன்னல்களுக்குட்படுத்தி வருவதுடன் அவர்களுக்கு அரசாங்கம் அனுப்பும் உணவுப் பொருள்களையும் நிவாரணப் பொருள்களையும் எடுத்துக் கொள்வதில் முதலிடம் வகிக்கின்ற புலிகள் தமிழர்களின் மனித உரிமைகளை மீறமாட்டார்களா? முன்பள்ளி செல்லும் வயதுடைய சிறார்களை அவர்களின் தயாருடன் போர் முனைக்கு அனுப்புவதன் மூலம் அவர்களின் மனித உரிமைகளையன்றி பட்டினியால் வாடும் குழந்தைக்கு பாலூட்டவேனும் சந்தர்ப்பம் அளிப்பார்களா வென்பது கேள்விக் குறியே.

தமிழ் மக்களின் மனித உரிமைகளை அப்பட்டமாக மீறும் புலிகள் அமைப்பு தமிழ் மக்களின் ஏகப்பிரதிநிதிகள் என்று கூறிக் கொண்டு அப்பாவிதமிழர்களுக்கு வழங்கும் விடுதலை இதுதானா? -என்று அந்தச் செய்திக் குறிப்பில் பிரஸ்தாபிக்கப்பட்டுள்ளது.(அ)


## கண்ணீர் அஞ்சலி

28.03.2008 அன்று காலமான எமது சபையின் சக ஊழியர் சு. கிட்டினன் அவர்களின் அன்புத் தந்தை

### அமரர் வேலன் சுந்தரம்

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வலி.வடக்கு பிரதேசபை உப அலுவலகம்,
காங்கேசன்துறை, மல்லாகம். (சி/552085) ஊழியர் நலன்புரிச் சங்கம்.

## கண்ணீர் அஞ்சலி



எமது மதிப்பிற்குரிய, அன்பும் பாசமும் உடைய ஆசிரியரும் ஓய்வுபெற்ற அதிபருமான

### சுப்பிரமணியம் ஜோசப் பூராசா

அவர்கள் காலமான செய்தி கேட்டு ஆழ்ந்த துயரடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஜேர்மனி. (72667) ம.மகேஸ்வரன் குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

முன்னாள் அதிபரும்
பிரபல சமூக சேவையாளருமான



### சுப்பிரமணியம் ஜோசேப் பூராசா

அவர்கள் காலமான செய்தியறிந்து ஆறாத் துயரடைந்தோம். அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவித்துக் கொள்கின்றோம்.

புங்குடுதீவு கல்வி அபிவிருத்திச் சபை,
(72659) புங்குடுதீவு.

## கண்ணீர் அஞ்சலி

### அமரர் செல்வநாயகம் செல்லத்தம்பி

(ஓய்வு பெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்)

எமது பாடசாலையின் நலன் விரும்பியான அமரரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் குடும்பத்திற்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
(72670) மல்லாகம் ம.வி.

## புதுவருடத்தை முன்னிட்டு இலவசக் கண்பரிசோதனையும் பல்பற்றிய ஆலோசனைகளும்

இடம்: ரஞ்சிதா மெடிக்கல் கிளினிக்

| | சுதுமலை | உடுவில் |
|---|---|---|
| காலம்: | சனி (05.04.08) | ஞாயிறு (06.04.2008) |
| | 9a.m - 2p.m | 10a.m - 1p.m |

இலவசக் கண்பரிசோதனையும், பல்பற்றிய ஆலோசனையும் வழங்கப்பட்டு
அதன் பிரகாரம் : ரூபா 600/- க்கு அழகிய பிறேமிலான கண்ணாடிகளும்
பல்கட்டுதல், கிளிப்போடுதல்
என்பன அரைக்கட்டணத்திலும் மேற்கொள்ளப்படும்.
முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.
T.P.021 222 6174

(72661) ஏற்பாட்டாளர்கள்.

## மரண அறிவித்தல்

### தம்பியையா அழகம்மா



கோப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட தம்பியையா அழகம்மா நேற்று (01.04.2008) செவ்வாய்க் கிழமை காலமானார்

அன்னார் காலஞ்சென்ற தம்பியையாவின் மனைவியும், சுதர்சன், சுதானந்தன், சுதாகரி ஆகியோரின் தயாரும் சுகிர்தா, அம்பிகா (ஆசிரியர், கொழும்பு), விஜயதேவன் (அதிபர், ஆவரங்கால் மகாஜன வித்தியாலயம்) ஆகியோரின் மாமியாரும், சுபராதன், சுதனிகா, சியாமளன், மதியுகன், துவாரகன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகை அன்னாரின் இல்லத்தில் இன்று (02.04.2008) புதன்கிழமை பி.ப 2.30 மணிக்கு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
சரவணபாவானந்த வீதி,
கோப்பாய் வடக்கு, கோப்பாய். (72680) மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## பாராட்டி வாழ்த்துகிறோம்



எமது பாடசாலை ஆசிரியை

### செல்வி சிவலோசனி சிவசுப்பிரமணியம் (B.Sc.)

அவர்கள் யாழ்.பல்கலைக்கழக முதுகல்வி மாணிப் பட்டம் (MEd) பரீட்சையில் சித்தியடைந்தமையையிட்டு பாராட்டுகளைத் தெரிவிப்பதுடன் கல்வியில் மேன்மேலும் சிறப்புற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

திருநெல்வேலி. பாடசாலைச் சமூகம்,
யா/முத்துத்தம்பி மகாவித்தியாலயம். (72668)

முருகமயம்

## நீர்வேலி கந்தசுவாமி கோயில் வருடாந்த பெருந்திருவிழா - 2008

நடமிடும் மயிலேறு நாயகனாம் நீர்வைக்
கடம்பக் கந்தனின் கழலடி தொழுதிடின்
திடமுற முருகன் திருவருட் துணையினால்
நடந்திடும் நம்வாழ்வில் நன்மைகள் தானே.

| | |
|---|---|
| 02.04.2008 | புதன்கிழமை கொடியேற்றம் |
| 19.04.2008 | சனிக்கிழமை இரதோற்சவம் |
| 20.04.2008 | ஞாயிற்றுக்கிழமை தீர்த்தோற்சவம் |
| 21.04.2008 | திங்கட்கிழமை திருக்கல்யாணம் |

அன்பர்கள், அடியார்கள் அனைவரும் விழாக்காலங்களில் கலியுக வரதனாகிய கந்தப்பெருமானை வழிபட்டு நல்லருள் பெறுவோமாக.

விளம்பர அனுசரணை: திருமுருகன் திருமண மண்டபமும் பல்பொருள் அங்காடியும், கரந்தன் வீதி, நீர்வேலி.

உரிமை: புரவலர் ந.திருமுருகன் (சிவசுப்பிரமணிய செட்டியார்)

அழகுசாதன அன்பளிப்பு பொருள்கள், அபிஷேகப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள், புடைவை வகைகள், பலசரக்குப் பொருள்கள், சைக்கிள் உதிரிப் பாகங்கள், காலணி வகைகள் மற்றும் வீடியோ போட்டோ கொப்பி, பக்திப்பாடல்கள் படப்பிரதிநிதிகள் என்பவற்றை ஒரே கூரையின் கீழ் பெற்றிடலாம்.

நவீன திருமண மண்டபப் பதிவுகளையும் மற்றும் அனைத்து சேவைகளையும் பெற்றிடலாம்.

தொ.பே.இலக்கம்: 060 221 7320 (சி/552083)

## தவறிவிட்டது

சிவராசா லக்ஷனா என்பவருடைய தே அ.அட்டை (நீர்வேலி தெற்கு, நீர்வேலி, 896163990V) 25.03.2008 அன்று நீர்வேலிக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் பஸ்ஸில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: அரியரட்ணம், நீர்வேலி ...

## காட்போட் விற்பனைக்குண்டு

உடன் தொடர்பு கொள்ளவும்
அன்னை நாகா பூட்சிற்றி,
175,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
... 222 5519, 222 5223 (7256...)

## யாழ். மாவட்ட பேக்கரி உரிமையாளர் சங்கம்

## கண்ணீர் அஞ்சலி

எமது அங்கத்தவர்களான கணபதி பேக்கரி உரிமையாளர் திருமதி வசந்தகுமாரி அவர்களின் மாமனாரும், சதா பேக்கரி உரிமையாளர் திருமதி இராஜேஸ்வரி அவர்களின் அன்புத் தந்தையுமாகிய

### அமரர் கந்தையா செல்லக்குட்டி

அவர்களுக்கு எமது கண்ணீர் அஞ்சலியை காணிக்கையாக்குவதோடு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

559, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (சி/552090) நிர்வாகத்தினர், அங்கத்தவர்கள், பணியாளர்கள்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சோளம், நிலக்கடலை, குரக்கன் பயிர்களின் உற்பத்தியைக் குடாநாட்டில் அதிகரிக்க நடவடிக்கை

## செயலகக் கூட்டத்தில் தீர்மானம்

யாழ்ப்பாணம்,ஏப்.2

யாழ்.மாவட்டத்தில் தற்காலத்துக்குப் பொருத்தமான சோளம், நிலக்கடலை, குரக்கன் போன்ற பயிர்களின் உற்ப்த்தியை அதிகரிப்பது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

விவசாய அபிவிருத்தியை முன்னேற்றுவது குறித்து ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று யாழ்.செயலகத்தில் நடைபெற்றது. அக்கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் மேலதிக அரச அதிபர், விவசாய அபிவிருத்தியுடன் தொடர்புடைய அரச திணைக்களங்களின் தலைவர்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், விவசாய அமைப்புகள் ஆகியவற்றின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அங்கு எடுக்கப்பட்ட முடிவுகள் வருமாறு:

✱ பழ மரங்களின் உற்பத்தியிலும் தெங்கு அபிவிருத்தியிலும் கூடிய கவனம் செலுத்தப்படவேண்டும் எனவும் வருகின்ற ஏப்ரல் மாதத்தில் தற்போது உற்பத்தி செய்யப்பட்டுள்ள 6,000 தென்னங்கன்றுகளை தெங்கு அபிவிருத்திக்குப் பொருத்தமான பிரதேசங்களை அடையாளம் கண்டு விற்பனை செய்வது எனவும் அடுத்தம் மாதம் மேலும் 15,000 தேங்காய்களைக் கொள்வனவு செய்து நாற்றுமேடை அமைத்து ஒக்ரோபர், நவம்பர் மாதத்தில் தென்னங்கன்றுகளை விநியோகிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது. இதற்காக மாவட்டச் செயலகம் ரூபா 10,000,000 ஒதுக்கீடு செய்யும்.

✱ அண்மையில் மழையினால் விதையினங்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாட்டினை நிவர்த்தி செய்யுமுகமாக தேவையான விதை இனங்களை உள்ளூர் விவசாயிகளிடம் இருந்து கொள்வனவு செய்யவும் மேலும் வவுனியா, கொழும்பு ஆகிய இடங்களில் இருந்து பெற்றுக்கொள்ளக்கூடிய விதைகளை உரிய காலத்தில் இங்கு தருவிப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

✱ மழை வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கான நஷ்டஈடு சம்பந்தமான பதிவுகளை மேற்கொள்ளும் போது நஷ்டஈடு பெற்றுக்கொள்வதற்கு தகைமை இல்லாத பலர் பிழையான தரவுகள் மூலம் பதிவுகளை மேற்கொள்ள முயற்சிப்பதாகவும் இத்தவறான நடவடிக்கைகளினால் மாவட்டத்தில் உண்மையாக நஷ்டம் அடைந்த விவசாயிகளுக்கு உதவி செய்ய இயலாத நிலைமை உருவாகக்கூடும் என்ற காரணத்தினால் சம்பந்தப்பட்ட சகலரும் உண்மைத் தன்மையுடன் பதிவுகளைச் செய்துகொள்ளுமாறு அரசாங்க அதிபரினால் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள். உதாரணம் - மழை ஆரம்பிப்பதற்கு முன்பதாக செய்கை பண்ணப்பட்டிருந்த காணிகளின் விஸ்தீரணத்தை விட பாதிப்பு ஏற்பட்ட காணிகளின் விஸ்தீரணம் கூடுதலாகக் காட்டப்பட்டுள்ளது. (1)

# கைதடி வடக்கில் உள்ள இரண்டு வீடுகளில் 12 லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் கொள்ளை

## ஆயுதங்களுடன் புகுந்த கொள்ளையர் கைவரிசை

தென்மராட்சி,ஏப்.2

கைதடி வடக்கில் இரு வீடுகளில் 12 லட்சம் ரூபா பெறுமதியான தங்க நகைகள் உட்பட பொருள்கள் கொள்ளையிடப்பட்ட சம்பவம் அண்மையில் இடம்பெற்றுள்ளது.

கடந்த 25ஆம் திகதி இடம்பெற்ற இச்சம்பவம் தொடர்பாகத் தெரிய வந்துள்ளதாவது:

இரவு 11 மணியளவில் நித்திரையிலிருந்த வீட்டுக்காரரை எழுப்பி மோட்டார் சைக்கிளுக்குப் பெற்றோல் தருமாறு கேட்டுள்ளனர்.

தனது மோட்டார் சைக்கிளிலிருந்த பெற்றோலை போத்தலில் எடுத்து கொடுப்பதற்காக வீட்டுக்காரர் கதவினைத் திறந்த போது திருடர்கள் உள்நுழைந்தனர் என்று கூறப்பட்டது.

பின்னர் துப்பாக்கி மற்றும் கத்தி ஆகிய ஆயுதங்களைக் காட்டி பயமுறுத்தி அவர்களை அறையொன்றில் அடைத்துவிட்டு நகைகள், பணம், கையடக்கத் தொலைபேசி உட்பட பெறுமதிமிக்க பொருள்களை சூறையாடிச் சென்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இரு வீடுகளிலிருந்தும் 42 பவுண் தங்க நகைகள், 50ஆயிரம் ரூபா பணம், சுமார் ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நான்கு கையடக்கத் தொலைபேசிகள் உட்பட பெறுமதிமிக்க பொருள்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன என்று சாவகச்சேரிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சாவகச்சேரி பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை இதே கோஷ்டியினர் அப்பகுதியில் உள்ள மற்றொரு வீட்டிலும் திருட்டு முயற்சியில் ஈடுபட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (203-207-288)

## குடாநாட்டின் பிரதேசச் செய்திகள்

### இளவாலை றோ.க. பாடசாலையின் பழைய மாணவர் தினம்

யாழ்ப்பாணம்,ஏப்.2

இளவாலை றோமன் கத்தோலிக்க தமிழ் ஆண்கள் பாடசாலையின் பழைய மாணவர் தினம் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை கொண்டாடப்படுகிறது.

மிக நீண்டகாலத்தின் பின்னர் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பழைய மாணவர்கள் மேற்கொண்ட அயராத முயற்சியின் பலனாக இந்தப் பழைய மாணவர் தினம் கொண்டாடப்படுகிறது.

பழைய மாணவர் தினத்தையொட்டிய பாடசாலையின் பதிவுகள் அடங்கிய நூல் ஒன்றும் வெளியிடப்படவுள்ளது. (50)

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,ஏப்.2

யாழ்.பண்ணை மீனாட்சி அம்மன் ஆலய அலங்காரத் திருவிழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை ஆரம்பமாகித் தொடர்ந்து 15 நாள்கள் நடைபெறவுள்ளது.

தினமும் பிற்பகல் 3.30 மணி தொடக்கம் விசேட அபிஷேகம், தீபாராதனை என்பன இடம்பெற்றுத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூசை நடைபெறும். இதனையடுத்து சுவாமி உள்வீதி உலா வருவார்.

இறுதி நாளான எதிர்வரும் 20ஆம் திகதி சங்காபிஷேகம் நடைபெற்றுத் தொடர்ந்து சுவாமி வெளிவீதி உலா வருதல் நடைபெறும். (203)

✱ ✱ ✱

நல்லூர்,ஏப்.2

மண்கும்பான் வெள்ளைப் புற்றடி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா எதிர்வரும் சனிக்கிழமை முற்பகல் 10.45 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

புதுவருடப் பிறப்பான 13ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தேர்த்திருவிழாவும் மறுநாள் காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறும்.

உற்சவ காலங்களில் தினமும் அன்னதானம் இடம்பெறும். (203-111)

✱ ✱ ✱

யாழ்ப்பாணம்,ஏப்.2

சாவகச்சேரி, நுணாவில் மேற்கு கொல்லங்கிராய் வீரகத்தி விநாயகர் ஆலயப் பெருந்திருவிழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறும்.

எதிர்வரும் சித்திரைப் புத்தாண்டு தினத்தன்று காலை தேர்த் திருவிழாவும் பிற்பகல் 2 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். (203-207)

# ஒவ்வொருவர் திறமையையும் மேம்படுத்த உதவும் புதிய மீன் எழுச்சித் திட்டத்தை உரிய முறையில் பயன்படுத்துங்கள்

## தென்மராட்சிப் பிரதேச செயலர் ஸ்ரீனிவாசன் வேண்டுகோள்



யாழ்ப்பாணம்,ஏப்.2

ஒரு கிராமத்தின் விடிவுக்காக உருவாக்கப்பட்ட இந்த மீள் எழுச்சித் திட்டத்தினை மக்கள் உரிய முறையில் பயன்படுத்தி ஏனைய பிரிவு மக்களுக்கு முன்னுதாரணமாக திகழ வேண்டும்.

வீடு தேடி வந்து ஒவ்வொருவரின் திறமைகளை மேம்படுத்த இத்திட்டம் உருவாக்கப்பட்டுள்ளதால் பயனாளிகள் தமது திறமைகளால் முயற்சிகளால் பொருளாதாரத்தை வளம்படுத்த முடியும்.

கிராமத்தின் வளர்ச்சிக்காக மட்டுமல்ல, அக்கிராமத்தில் வதியும் ஒவ்வொருவரும் பயன்பெற இத்திட்டம் உதவும்.

இவ்வாறு தென்மராட்சிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற உலக வங்கியின் 'நியாப் II' மீள் எழுச்சித் திட்ட அறிமுக விழாவில் உரையாற்றுகையில் பிரதேச செயலர் செ.ஸ்ரீனிவாசன் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து உரையாற்றுகையில்:

இத்திட்டம் உருவாக்கப்பட்டதன் நோக்கம் கிராம அபிவிருத்தி மட்டுமல்லாது அப்பிரிவில் வதியும் அனைத்து மக்களும் பயன்பெறவேண்டுமென்பதே.

ஒவ்வொரு குடும்பத்திலும் திறமையுள்ளவர்கள் இருக்கிறார்கள். இவர்களின் திறமைகள் இலைமறைகாயாக ஒளிந்துள்ளன. இதற்கு பல்வேறு காரணங்கள் உள்ளன. அவற்றில் ஒன்ற பணவசதியின்மை, பணவசதியினை ஏற்படுத்திக் கொடுப்பின் திறமைகளை வெளிக்கொணர முடியும் என்பதை ஆய்வுகள் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

இதனாலேயே இத்திட்டத்திற்கு கிராம மட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ள நிதியில் 50 சதவீதமானவை ஒவ்வொரு குடும்பத்தின் வாழ்வாதார நிலைகளை குறிவைத்துள்ளது. அத்தகைய திட்டங்களைச் செயற்படுத்த ஒவ்வொருவரும் பாடுபடவேண்டும்.

'நியாப்' செயற்றிட்டங்களின் முக்கிய பயனாளிகளாகப் பெண்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளனர்.

குடும்பத்தில் உள்ளவர்களின் தேவைகளைக் கவனிப்பதுடன் குடும்பத்தின் பொருளாதாரத்தை மேம்படுத்தும் செயற்றிட்டங்களையும் பெண்கள் கவனித்து வருகின்றனர். இதனால் இத்திட்டத்தில் பெண்களின் பங்களிப்பு அத்தியாவசியமெனக் கருதப்படுகிறது.

இத்திட்டத்தில் ஒதுக்கப்படும் நிதியில் 40 வீதம் அபிவிருத்திக்கும் 50 வீதம் வாழ்வாதார உதவிகளுக்குமென வழங்கப்பட்டுள்ளது. உங்களுக்கு வழங்கப்படும் வாழ்வாதார உதவிகளை நல்லமுறையில் பயன்படுத்தி அந்தக் கிராமம் மட்டுமல்ல பிரதேசமே பயன்பெற பாடுபடவேண்டும் - என்றார்.

நியாப் மீள் எழுச்சித் திட்ட உதவித் திட்டப் பணிப்பாளர் வே.விஸ்வலிங்கம் உரையாற்றுகையில்:

உலக நாடுகளுடன் ஒப்பிடும்போது யாழ்.மாவட்டம் பெருமளவு பின்தங்கியுள்ளது. தொழில்நுட்ப வளங்கள் கூட எம் மத்தியில் குறைவாக உள்ளன.

எமது மக்களிடையே கல்வி வளம் குறையவில்லை என்பது உலகறிந்த உண்மை. அத்துடன் எமது பிரதேசத்தில் காணப்படும் பனைவளம் எமது மனோ திடத்தை உலகிற்கு எடுத்துக் காட்டும் வளமாக உள்ளது.

ஒரு கிராமம் வளர்ச்சியடைந்தால் அந்தக் கிராமத்தையுள்ளடக்கிய பிரதேசம் மட்டுமல்ல அந்த மாவட்டத்தை வளர்ச்சியடையச் செய்யும்.

ஒவ்வொரு குடும்பத்தின் பின்னணியை ஆய்வுசெய்து அவர்களின் தேவைகளை இனங்கண்டு அவர்களின் வாழ்வாதாரத்தை வளப்படுத்துவதே இத்திட்டத்தின் அடிப்படை நோக்கம் - என்றார். (203-207)



மீள் எழுச்சித் திட்ட அறிமுக நிகழ்வுகள் கரவெட்டி மற்றும் பருத்தித்துறை பிரதேச செயலகங்களில் இடம்பெற்றபோது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

கரவெட்டிப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பங்குத்தந்தை எஸ்.ஆனந்தகுமார் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் மீள் எழுச்சித் திட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் கே.வி[illegible]தையும் முதல் இரண்டு படங்களிலும் காணலாம்.

பருத்தித்துறைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் பிரதேச செயலர் ஆர்.[illegible]ஸ்வரன் மங்கள விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் கலந்துகொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் அடுத்த இரண்டு படங்களிலும் காணலாம். (படங்கள்: சுந்தா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுக்கு சீனாவால் ஆபத்து!



புதுடில்லி, ஏப்ரல்.02

''இந்தியாவுக்கு ஆபத்து ஏற்படுத்தும் நாடுகளில் சீனா முதல் இடத்தில் இருக்கிறது.'' - என்று ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தெரிவித்துள்ளார்.

முன்னாள் பாதுகாப்பு அமைச்சரும் தேசிய ஜனநாயக் கூட்டணி அமைப்பாளருமான ஜோர்ஜ் பெர்னாண்டஸ், ஞாயிற்றுக்கிழமை டில்லியில் அளித்த பேட்டியில் பின்வருமாறு கூறினார்:-

## பெர்னாண்டஸ் பேட்டி

''டில்லியில் உள்ள சீன தூதரகத்தில் திபெத்தியர்கள் அத்துமீறி நுழைந்தமைக்காக பீஜிங்கில் உள்ள இந்திய தூதரை நள்ளிரவில் அழைத்து சீனா கண்டனம் தெரிவித்துள்ளது. சீன வெளியுறவுத் துறை அதிகாரிகளை இந்தியத் தூதர் நள்ளிரவில் போய் பார்த்தது இந்தியாவுக்கு அவமானகரமானது.

இந்தியாவுக்கு ஆபத்து ஏற்படுத்தும் நாடுகளில் சீனா தான் முதல் இடத்தில் இருக்கிறது. திபெத் பிரச்சினையில் சீனாவுக்கு இந்தியா அடிமையாகிவிட்டது. தேசிய ஜனநாயகக் கூட்டணி ஆட்சியின் போது திபெத்தை சீனாவின் ஒரு பகுதி என்று இந்தியா அங்கீகரித்தது தவறு.' - இவ்வாறு பெர்னாண்டஸ் கூறினார்.

# தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் சமுர்த்திப் பயனாளிகளுக்கு பொருள்கள்

வலி.வடக்கு, ஏப்.2

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் சமுர்த்திப் பயனாளிகளாக இருப்பவர்களுக்கு கியூடெக் - கரித்தாஸ் நிறுவனத்தினால் இன்று முதல் உணவுப் பொருள்கள் விநியோகம் செய்யப்படவுள்ளன.

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட ஜே/221 இளவாலை வடக்கு, ஜே/222 இளவாலை வட மேற்கு, ஜே/223 வித்தகபுரம், ஜே/224 பன்னாலை, ஜே/227 தெல்லிப்பழை கிழக்கு, ஜே/229 துர்க்காபுரம், ஜே/239 கட்டுவன் மேற்கு, ஜே/244 வயாவிளான் கிழக்கு ஆகிய பிரிவுகளைச் சேர்ந்தவர்களுக்கு வழங்கப்படவுள்ளன.

உரிய சமுர்த்திப் பயனாளிகளை இன்று தொடக்கம் மூன்று தினங்களில் தெல்லிப்பழை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் பொருள்களைப் பெற்றுக் கொள்ளும்படி வலி.வடக்கு பிரதேச செயலாளர் கேட்டுள்ளார்.

(203-86)

## யாழ்.மத்திய கல்லூரி
### பழைய மாணவர் சங்கம்
### வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2008

மேற்படி சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் 20.04.2008 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு சங்கத் தலைவர் V.T.சிவலிங்கம் தலைமையில் யாழ்.மத்திய கல்லூரியில் நடை பெறும்.

**நிகழ்ச்சி நிரல்**

1. மௌன வணக்கம்
2. தலைவர் உரை
3. போசகர் உரை
4. சென்ற கூட்ட அறிக்கை
5. செயற்பாட்டறிக்கை - செயலாளர்
6. பொருளாளர் கணக்கறிக்கை
7. பிரேரணைகள் (இருப்பின்)
8. உத்தியோகத்தர்கள் தெரிவு
9. இதர விடயங்கள்

பிரேரணைகள் சமர்ப்பிப்பவர்கள் 11.04.2008 இற்கு முன்பாக *செயலாளர், பழைய மாணவர் சங்கம், யாழ்.மத்திய கல்லூரி, யாழ்ப்பாணம்* என்னும் முகவரிக்கு தபாலிலோ நேரிலோ சேர்க்குமாறு வேண்டப்படுகிறீர்கள்.

★ புதிதாக இணைய விரும்பும் அங்கத்தவர்கள் 11.04.2008 இற்கு முன் இணைந்து கொள்ளலாம்.

**ச.தவநேசன்,**
கௌரவ செயலாளர், பழைய மாணவர் சங்கம்,
யாழ்.மத்திய கல்லூரி.

(இ/552073)

## 50ஆம் ஆண்டு திருமண வாழ்த்து



23, காரைக்காட்டு ஒழுங்கை,
வண்ணார்பண்ணை,
யாழ்ப்பாணம்.

**வை.கிருஷ்ணப்பிள்ளை**
(வேலுப்பிள்ளை)
**கி.இந்திராணி**
(திரவியம்)

திருமணப்பந்தத்தில் இணைந்து இன்று பொன்விழா காணும் தம்பதியினரை வாழ்த்துகின்றோம்.

நிகழ்வு: இன்று (02.04.2008) புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர், நண்பர்கள்.**

(72636)

# கந்தரனுபூதி இலவச வெளியீடு

சுழிபுரம், ஏப்.2

சுழிபுரம் பஜனைச் சபையினரால் கந்தரனுபூதி 51 பாடல்கள் இலவசமாக வெளியிடப்பட்டுள்ளது.

சுழிபுரம் பறாளை சிவசுப்பிரமணிய சுவாமி ஆலய திருவிழாவை முன்னிட்டு இது வெளியிடப்பட்டு அனைவருக்கும் வழங்கப்பட்டு வருகின்றது.

(203-28)

## அருள்மிகு ஸ்ரீ நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானம்
### வருடாந்த மகோற்சவ விஞ்ஞாபனம்

| | |
|---|---|
| ★ கொடியேற்றம்: | 10.04.2008 வியாழன் மு.ப. 10 மணி |
| ★தெப்பத் திருவிழா: | 14.04.2008 திங்கள் மாலை |
| ★கயிலாய வாகனத் திருவிழா: | 15.04.2008 செவ்வாய் மாலை |
| ★சப்பறத் திருவிழா: | 19.04.2008 சனிக்கிழமை மாலை |
| ★ தேர்த்திருவிழா: | 20.04.2008 ஞாயிறு மு.ப.10.30 மணி |
| ★ தீர்த்தோற்சவம்: | 21.04.2008 திங்கள் மு.ப.10.30 மணி |
| ★வசந்தோற்சவம்: | 23.04.2008 புதன் மாலை. |

குறிப்பு:
விழாக்கால தற்காலிக கடைகள் 06.04.2008 ஞாயிற்றுக்கிழமை மு.ப.10 மணிக்கு ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் சித்தி பெற்றவர்கள் வாடகைப் பணம் முழுவதையும் செலுத்தி பற்றுச் சீட்டுப் பெறவேண்டும்.
கடைகள் பெற்றவர்கள் மானிப்பாய் பிரதேச சபையில் அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும்.

*சீரணி,*
*சண்டிலிப்பாய்.* (72637) **அறங்காவலர் சபை.**


## IBMS

புதிய பிரிவுகள் ஆரம்பம்

சிறப்புக் கட்டணச் சலுகை

பிரிவு I : 03.04.2008 } பகல் 10 மணி
பிரிவு II : 10.04.2008 }

Diploma in Microsoft Office - 3 Months
Diploma in Desk Top Publishing - 3 Months
Diploma in Internet Technology - 3 Months

M.M.V. Road, Nelliyady, Karaveddy.
T.P.: 0602218784


# சுழிபுரம் கிழக்கில் இலவச மருத்துவமுகாம்

சுழிபுரம், ஏப்.2

மூளாய் கூட்டுறவு ஐக்கிய சங்க வைத்தியசாலையினர் மாதாந்தம் நடத்தி வரும் இலவச மருத்துவ சேவையின் நான்காவது சேவை சுழிபுரம் கிழக்கில் நடத்தப்பட்டுள் ளது.

இச்சேவையில் 78 நோயாளர்கள் சேவையைப் பெற்றுக் கொண்டனர் என்று கூறப்பட்டுள்ளது.

(203-28)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்
**க.பாலசுந்தரராஜா**
(ஓய்வுபெற்ற எழுதுவினைஞர்)



தோற்றம் 18★12★1952
மறைவு 23★03★1998

திதி: ஏகாதசி 02.04.2008

ஆண்டுகள் பத்து கடந்த போதிலும் - எம்
மனக் கண்முன் நிழலாடும் எம் அன்புக் கணவரின்
ஆத்மா சாந்தியடைய விநாயகர், முருகன் பாதம் பணிந்து
இறைவனை வேண்டுகின்றேன். நெஞ்சிருக்கும்வரை உங்கள் நினைவிருக்கும்.

அன்பு மனைவி பாஞ்சாலி
(தே.வி.அ.க. மன்னார்)

(72818)

# கோப்பாய் கோட்டத்தில் சாரணர் தலைவர்களுக்கு இருநாள் பயிற்சிகள்

யாழ்ப்பாணம், ஏப். 2

கோப்பாய்க் கோட்டச் சாரணர், குருளைச் சாரணர் தலைவர்களுக்கான பயிற்சி கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் எதிர்வரும் 5 ஆம், 6 ஆம் திகதிகளில் காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.30 மணிவரை நடைபெறவுள்ளது. உரிய நேரத்திற்கு அனைவரையும் வருகை தருமாறு கோட்டக் கல்வி அலுவலர் சி.சித்திரவடிவேல் கேட்டுள்ளார்.

(203)

## நினைவு அஞ்சலி
31ஆம் நாள் 16ஆம் ஆண்டு நினைவு



அமரர் சீனியன் பூபாலு
(பூவலிங்கம்)
மலர்வு 03★04★1937 உதிர்வு 03★03★2008



S.P. புஸ்பராசா

**நீங்கள் எம்மை விட்டு மறைந்து சென்றாலும் உங்கள் நினைவுகள் எம்மைவிட்டு அகலாது எப்பொழுதும் எல்லாவற்றிலும் நிறைந்துநின்று எம்மை நல்வழியில் வழிநடத்திய எம் அன்புத் தெய்வங்களே! உங்கள் நினைவுகளோடு எத்தனை பிறப்புகள் எடுத்தாலும் எங்கள் நிழலில் உங்கள் நிஜங்கள் தொடரும்...**

03.03.2008இல் இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவரின் சபிண்டீகரண நிகழ்வு இன்று (02.04.2008) புதன்கிழமை காலை அவரின் இல்லத்தில் நடைபெறும். இந்நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

**மனைவி, பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், சகோதரங்கள், உற்றார், உறவினர்கள்.**

நாவலடி,
உடுப்பிட்டி.

தகவல்: பூ.புவனேந்திரராசா
(மகன் - சின்னண்ணா)

(72545)

உரிமையாளர்: "திருஷாலினி மணப்பந்தல்சேவை"

## தவறிவிட்டது

முருகன் இராசையா என்பவருடைய தே.அ.அட்டை (532122226V), இ.லெசிதரன் என்பவருடைய தே.அ.அட்டை (861302024V) விஷேட அடையாள அட்டை என்பன 29.03.2008 அன்று யாழ்.போதனா வைத்தியசாலையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும்.

தொடர்பு: பூலசிட்டி, அச்செழு, நீர்வேலி.
T.P.0777110065, 0776621845

(இ/552072)


## இறைச்சிக்கோழி விற்பனை

புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து குறைந்த விலையில் பெற்றுக் கொள்ளலாம்.

**நல்லூர் பாம் சென்ரர்**
19, முருகேசர் லேன், நல்லூர். (72220)

## கோழிக்குஞ்சு விநியோகம்

BAHIRA புறொயிலர் குஞ்சுகள் PIRIMA பேட்டுக் குஞ்சுகள் 03.04.2008 விநியோகிக்கப்படும்.

\# நாகஜீவ் - நவாலி வீதி, ஆனைக்கோட்டை
\# மதுரா - ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்
\# சிற்றி பாம் றேடேர்ஸ் - கல்வியங்காடு.
\# திருமகள் களஞ்சியம் - திலவிங்கப்புளியடி
\# T.ரவி - சாவகச்சேரி

[illegible] தெல்லிப்பழை, கோப்பாய், நல்லூர் ஆகிய கால்நடைச் சங்கங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

(72618)

## Scholarship for Tally Training

AAT, CIMA, CMA, IAB, Chartered(SL), HND, HNDA பல்கலைக்கழக மற்றும் உயர்கல்வி மாணவர்கள், A/L மாணவர்கள் மற்றும் கணக்கியலில் ஆர்வமுடையவர்கள் இத்தேர்வில் பங்குபற்றலாம்.

30 நிமிடங்கள் மட்டுமே நடைபெறும் இப்பரீட்சையில் வர்த்தகம் மற்றும் கணக்கியல் சம்பந்தப்பட்ட 30 கேள்விகளுக்கு விடையளிக்க வேண்டும். எமது நிலையங்களிலேயே நடைபெறும் இப்போட்டிப் பரீட்சையில் பங்குபற்றி 60% வரையிலான கட்டணக்கழிவை பெறமுடியும்.

Accountancy Intelligence Test

Win upto 60% Scholarship

Tally Training
AIT 2008
Accountancy Intelligence Test
Super Exclusive Offer
March 5th to April 21st
REGISTRATION IN PROGRESS

Tally கணக்கியல் மென்பொருள் கற்கைநெறி
(Certified Computer Accountant)

விரையுங்கள் வெற்றி பெறுங்கள்!

மேலதிக விபரங்களுக்கு

CSC
Computer Software College
(Asian Business College)

101, 2ம் மாடி ஸ்டான்லி வீதி,
(மக்கள் வங்கிக்கு மேல்)
யாழ்ப்பாணம். Phone - 021 -222 8196


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொக்குவில் இந்துவை 8 விக்கெட்டுக்களால் வெற்றி கொண்டது சென்றல்

வலி வடக்கு, ஏப்.2

யாழ்ப்பாணப் பாடசாலைகளின் 19 வயதுப் பிரிவுக்கு உட்பட்டவருக்கான கிரிக்கெட் போட்டியொன்றில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 08 விக்கெட்டுக்களினாலும் 03 ஓட்டங்களினாலும் வெற்றி பெற்றுள்ளது.

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும் இடையிலான ஆட்டம் கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி 61 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 224 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது.

செல்ரன் 55, ஸ்ரீபன்ராஜ் 42, டயான் 34 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

வல்லவக்குமரன் 16 ஓவர்கள் பந்து வீசி 03 விக்கெட்டுக்களையும், கே.நிரோஜன், எஸ்.நிரோஜன் ஆகியோர் முறையே 57, 47 ஓட்டங்களைக் கொடுத்து 03, 02 விக்கெட்டுக்ளையும் கைப்பற்றினார்கள்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 37 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 100 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

வல்லவக்குமரன் 27, ஜெனார்த்தனன் 16 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டனர்.

டயான் 10 ஓவர்கள் பந்து வீசி 26 ஓட்டங்களுக்கு 05 விக்கெட்டுக்களையும், கோபிகன் 11 ஓவர்கள் பந்து வீசி 36 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

124 ஓட்டங்களால் முன்னிலையில் நின்ற யாழ்.மத்திய கல்லூரி இரண்டாவது இனிங்சில் கொக்குவில் இந்துக் கல்லூரியை ஆடும்படி கேட்டுக்கொண்டது.

இரண்டாவது இனிங்சில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக் கல்லூரி 51 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 152 ஓட்டங்களை மட்டுமே பெற்றுக் கொண்டது.

ஜனார்த்தனன் 26, கோபிகன் 22, வல்லவக்குமரன் 20 ஓட்டங்களை பெற்றுக் கொண்டார்கள்.

செல்ரன் 05 ஓவர்கள் பந்து வீசி 08ஓட்டங்களுக்கு 2விக்கெட்டையும் சிவகரன் 05 ஓவர்கள் பந்து வீசி 11 ஓட்டங்களுக்கு 02 விக்கெட்டுக்களையும் மற்றும் நவநீத் 50 ஓட்டங்களுக்கு 03 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினார்கள்.

26 ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய யாழ்.மத்திய கல்லூரி 10.4 ஓவர்களில் 02 விக்கெட்டுக் களை இழந்து 29 ஓட்டங்களைப் பெற்று வெற்றியைத் தனதாக்கிக் கொண்டது. (1-86)



வலிகாமம் கல்வி வலயப் பாடசாலை அணிகளுக்கு இடையே இடம்பெற்ற பூப்பந்தாட்டப் போட்டிகள் மானிப்பாய் இந்துக் கல்லூரி உள்ளக விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றன.

இப் போட்டியின் இறுதிப் போட்டியில் சம்பியனாக தெரிவு செய்யப்பட்ட உடுவில் மான்ஸ் வித்தியாலய வீராங்கனை ஒருவரின் ஆட்டத்தின் போது. (படம்: நேசன்)

# தென்மராட்சி வலய அணிகளின் கரப்பந்தாட்டம்; நாவற்குழி அ.த.க.மூன்று பிரிவுகளில் முதலிடம்

யாழ்ப்பாணம், ஏப்.2

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைக் கரப்பந்தாட்ட அணிகளுக்கிடையில் நடத்தப்பட்ட சுற்றுப் போட்டிகளில் பெண்கள் பிரிவில் கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை மூன்று பிரிவுகளில் வெற்றி பெற்றது.

ஆண்கள் பிரிவில் கைதடி முத்துக் குமாரசாமி ம.வி. இரு பிரிவுகளிலும் முதலிடங்களைப் பெற்றுள்ளது.

வலைப் பந்து சுற்றுப் போட்டியில் கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி. இரு பிரிவுகளில் முதலிடங்களைப் பெற்றுள்ளது.

போட்டிகளின் முடிவு விவரம் வருமாறு:

**கரப்பந்து**

**ஆண்கள்பிரிவு**

* 15வயதுப் பிரிவு- கைதடி முத்துக் குமார சுவாமி ம.வி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி.
* 17 வயதுப் பிரிவு- மீசாலை வீரசிங்கம் ம.வி., கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி.
* 19 வயதுப் பிரிவு- கைதடி முத்துக் குமாரசாமி ம.வி., சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**பெண்கள் பிரிவு**

* 15 வயதுப் பிரிவு- கைதடி நாவற்குழி அ.த.பாடசாலை, சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி.
* 17 வயதுப் பிரிவு- கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை, கச்சாய் அ.த.க.பாடசாலை.
* 19 வயதுப் பிரிவு- கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலை, சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

**வலைப்பந்து**

* 15 வயதுப் பிரிவு- மீசாலை வீரசிங்கம் ம.வி., கச்சாய் அ.த.க.பாடசாலை.
* 17வயது பிரிவு- கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., சாவகச்சேரி இந்துக் கல் லூரி.
* 19 வயதுப் பிரிவு- கொடிகாமம் திருநாவுக்கரசு ம.வி., கச்சாய் அ.த.க.பாடசாலை.

(1-207)






கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் பிரதேச மட்ட விளையாட்டுப் போட்டிகளின் உதைபந்தாட்டப் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்த இறுதிப் போட்டியில் பங்கு பற்றிய இரு கழகங்களின் வீரர்களும் சர்வதேசப் போட்டிகளில் நடைபெறுவதைப் போன்று உதைபந்தாட்ட வீரர்களின் சீருடை தரித்து சிறுவர்களையும் கையில் பிடித்தவாறு மைதானத்தில் களமிறங்கிய போது எடுக்கப்பட்ட படம்.

(படம்: சுந்தா)

# வலிகாமம் வலய பெண்கள் கரப்பந்தாட்டப் போட்டி: 15 வயதுப் பிரிவில் சிவப்பிரகாசம் ம.வி. சம்பியன்

வலி வடக்கு, ஏப்.2

வலிகாமம் கல்வி வயலப் பாடசாலைகளின் பெண்களுக்கான கரப்பந்தாட்டப் போட்டியில் 15 வயதுப் பிரிவில் சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம் சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற இறுதிப் போட்டியில் சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயமும், அராலி கிழக்கு அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுகள் கொண்ட இப் போட்டியில் சங்கானை சிவப்பிரகாசம் முதல் இரண்டு நேர் சுற்றுக்களை வெற்றி கொண்டு சம்பியனாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

சங்கானை சிவப்பிரகாசம் வித்தியாலயம் இரண்டு செற்றுக்களையும் முறையே 25:05, 27:25 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

3ஆம் இடத்திற்கான போட்டியில் மல்லாகம் மகாவித்தியாலயமும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

மூன்று சுற்றுக்கள் கொண்ட இப் போட்டியில் மகாஜனக் கல்லூரி முதல், மூன்றாம் சுற்றுக்களை முறையே 25:22, 25:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றிபெற்றது. மல்லாகம் மகாவித்தியாலயம் 2ஆம் சுற்று 25: 21 என்ற புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

மகாஜக் கல்லூரி 2:1 என்ற செற்கணக்கில் வென்று 3 ஆம் இடத்தைப் பெற்றுள்ளது.

(50-86)

# தீவக வலய கரப்பந்தாட்டத்தில் வெற்றி பெற்ற அணிகள்

வேலணை, ஏப்.2

தீவகக் கல்வி வலயப் பாடசாலைகளுக்குக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியில் இடம்பெற்றன.

இப்போட்டிகளின் முடிவுகள் வருமாறு:

**ஆண்கள்**

* 15வயதுப் பிரிவு- நயினாதீவு கணேஷா வித்தியாலயம், ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, காரை. யாழ்ற்ரன் கல்லூரி.
* 17வயதுப் பிரிவு- ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, காரை. யாழ்ற்ரன் கல்லூரி, வேலணை மேற்கு நடராசா வித்தி.
* 19வயதுப் பிரிவு- ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி, அனலை தீவு சதாசிவம் வித்தியாலயம், நயினாதீவு கணேஷா வித்தியாலயம்.

**பெண்கள்**

* 15வயதுப் பிரிவு- நெடுந்தீவு றோ.க.மகளிர் ம.வி., வேலணை மேற்கு நடராசா ம.வி, கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் ம.வி.
* 17வயதுப் பிரிவு- கலாநிதி ஆ.தியாகராசா ம.வித்தி., கரம்பன் சிறிய புஸ்பம் மகளிர் ம.வி., வேலணை மத்திய கல்லூரி.
* 19 வயதுப் பிரிவு- ஊர்காவற் றுறை புனித மரியாள் மகளிர் ம.வி., கரம்பன் சிறியபுஸ்பம் மகளிர் ம.வி., காரை.கலாநிதி ஆ.தியாகராசா வித்தி.

(1-111)





வடமராட்சிக் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் அண்மையில் இடம்பெற்றன. இதில் 19 வயதுப் பிரிவில் முதலாம் இடத்தைப் பெற்ற வட.இந்து மகளிர் கல்லூரி, இரண்டாம் இடத்தைப் பெற்ற பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை ஆகியவற்றின் அணிகள் நிற்பதை முதலாவது படத்திலும், இரு அணிகளும் மோதுவதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(50-155)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மானிப்பாய் அருள்மனை இல்ல வளாகத்தில் நடைபெற்ற சவர்க்காரச் சிற்பக் கண்காட்சியில் பார்வைக்கு வைக்கப்பட்டிருந்த உதயன் பத்திரிகை இலச்சினை அடங்கிய சிற்பங்களை முத லாவது படத்திலும்-

சிற்பக் கலைஞர் மகேசு பார்த்திபனுக்கு தென்னிந்திய திருச்சபையின் யாழ்.பேராயர் அதிவண. டானியல் தியாகராசா சிற்பக்கலை வினோதன் பட்டம் வழங்கி பொன்னாடை போர்த்திக் கௌரவிப்பதை இரண்டாவது படத்திலும் காணலாம்.

(படங்கள்: லக்ஷ்மன்)

## ஆலய உண்டியல் உடைத்துத் திருட்டு

வலி.தென்மேற்கு, ஏப்.2

பண்டத்தரிப்பு, காலையடி கேதீஸ்வர நாதர் ஆலயத்தில் உண்டியல் பெட்டி உடைக்கப்பட்டு அதிலிருந்த பணம் திருடப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற இத் திருட்டு சம்பவத்தில் இரும்பினால் செய்யப்பட்ட உண்டியல் பெட்டியின் பூட்டை கூரிய ஆயுதத்தினால் வெட்டி உடைத்து விட்டு அதிலிருந்த பணத்தைத் திருடிச் சென்றுள்ளனர்.

இதே சமயம்- இந்த ஆலயத்திற்கு பக்கத்திலுள்ள ஸ்ரீ.கதிர்வேலாயுத சுவாமி ஆலயத்திலும் உண்டியல் பெட்டியை உடைக்க திருடர்கள் முயற்சித்த போதிலும் அது கைகூடாததினால் தமது முயற்சியை கைவிட்டு சென்றதாக ஆலய வட்டாரத்தினர் தெரிவித்தனர். (203-135)


## விற்பனைக்குண்டு

6 kg எடை கொண்ட
புதிய LG மொடல் வோசிங் மிசின்
விற்பனைக்குண்டு.
தொடர்பு:
முரளி வீடியோ சென்ரர்
ஆடியபாதம் வீதி, நல்லூர்.
(72639)



## பாராட்டி வாழ்த்துகின்றோம்



யா/குடத்தனை கரையூர் அ.மி.த.க.
பாடசாலையின் அதிபராகப் பதவியேற்றுள்ள
நெல்லண்டை, பருத்தித்துறையைச் சேர்ந்த
சிவஸ்ரீ
தியாக சோமாஸ்கந்தராஜாக் குருக்கள்
B.A.,Dip.in.Ed., M.A.
(நெல்லண்டை பத்திரகாளியம்மன்,
வீரமாகாளியம்மன் பிரதமகுரு)
அவர்கள் மேலும் பல உயர்வுகளைப்
பெற வாழ்த்துகின்றோம்.
மணியம் கணபதிப்பிள்ளை ஞாபகார்த்த நிதியம், நெல்லண்டை.
(சி/552078)



## விற்பனைக்கு

ஐம்பது நாள்கள் சென்ற வெள்ளை நிற பொமேரியன் நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்பு: துரைசிங்கம்,K.R.வீடியோ,
270, கனகரத்தினம் வீதி,
நாயன்மார்கட்டு,
யாழ்ப்பாணம். (72645)



## சேவைநலன் பாராட்டு

செல்வி சிவகுரு பேரின்பநாயகி



எமது கல்லூரியில் கடந்த 17
ஆண்டுகளாக நடன
ஆசிரியையாகக் கடமை புரிந்து,
பல நடன ஆசிரியைகளை
உருவாக்கிய பல்திறமை
கொண்டு ஆசிரிய
சேவையினின்றும் ஓய்வுபெறும்
செல்விசிவகுரு பேரின்பநாயகி
அவர்களைப் பாராட்டி
வாழ்த்துவதுடன் சகல
நலன்களும் பெற்று பல்லாண்டு
காலம் வாழ வாழ்த்தி
நிற்கின்றோம்.

பாடசாலைச் சமூகம்,
யா/வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரி,
வதிரி, கரவெட்டி.
(சி/552081)



## தவறிவிட்டது

விஸ்ணுகுமாரன் சுரேகாவின் புங்குடுதீவு வதிவிடத்தையுடைய தேசிய அடையாள அட்டை இல.(867371435V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து சு.வீரசிங்கம், 140,பூதவராய வீதி, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி எனும் முகவரியில் ஒப்படைக்கவும். (72645)



## கண்ணீர் அஞ்சலி

எமது சக மாணவன் காசிநாதன் ராஜதுரை
அவர்களின் அன்புத் தாய்
திருமதி காசிநாதன் சிவயோகம்
அவர்களின் மறைவால் துயரில் மூழ்கியிருக்கும்
அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த
அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா
சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
சைவசித்தாந்த
முதுகலைமாணி மாணவர்கள்.
(72643)


## பேச்சுத் திறன்காண் நிகழ்வு

யாழ்ப்பாணம், ஏப்.2

யாழ்.முன்பள்ளி ஆசிரியர் சங்கத்தின் கீழ் இயங்கும் யாழ்.கோட்ட முன்பள்ளிகள் இணைந்து நடத்தும் பேச்சுத் திறன்காண் நிகழ்வு எதிர்வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்.சென். ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ் விற்குப் பிரதம விருந்தினராக யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் கலந்து கொள்வார். (202)


## கண்ணீர் அஞ்சலி



முன்னாள் தலைமை ஆசிரியரும், எமது
கிராம முன்னேற்றத்திற்கு உழைத்தவரும்
புங்குடுதீவு அந்தோனியார்
தேவாலய ஸ்தாபகருமான
சுப்பிரமணியம் ஜோசேப் பூராசா
*(ஓய்வுபெற்ற அதிபர்)*
அவர்கள் காலமான செய்தி அறிந்து மிகுந்த
அதிர்ச்சி அடைவதுடன் அன்னாரின்
பிரிவால் துயரடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு எமது
அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின்
ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

வங்களாவடி,
வேலணை.

வே.திருநாவுக்கரசு
குடும்பம்,
இந்திரா பல்பொருள் வாணிபம்.
(சி/552079)



## முதலாம் ஆண்டு நினைவலைகள்



மண்ணில் 15.10.1942
விண்ணில் 13.04.2007

அமரர் கணபதி ஜயந்தன்

கதிரவன் ஒளிரமுன் கண்விழித் தெழுந்து
எதிலுமே நெறியோடு ஏற்றமாய் உழைத்து
பதிதனில் எமையே புகழுற வைத்த
உதிரத்தில் உறைந்த உறவினை மறப்போமா.

கைதடி மேற்கு,
கைதடி.
(சி/552077)
குடும்பத்தினர்.



# COMPUTER EXPRESS
INSTITUTE OF INFORMATION TECHNOLOGY
#15, Sirambiyadi Lane, Jaffna  Branch : #167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 021 222 8250 , 0777 222422

மாபெரும் புலமைப்பரிசில் திட்டம் 2008 80% off

அனைவருக்கும் புலமைப்பரிசில்

| | | |
|---|---|---|
| Diploma in Computer Science 4 Months ~~10,750~~ 2,150 | Honours Diploma in Computer Science 5 Months ~~13,000~~ 2,600 | Diploma in Web page Designing 4 Months ~~10,750~~ 2,150 |
| Diploma in Graphic Desining 4 Months ~~10,750~~ 2,150 | Diploma in Desktop Publishing 4 Months ~~10,000~~ 2,000 | Diploma in Hardware Engineering 3 Months ~~10,000~~ 2,000 |
| Diploma in Auto CAD 3 Months ~~10,000~~ 2,000 | Diploma in Microsoft Office 3 Months 1,500 | Accounting Package 3 Months ~~10,750~~ 2,150 |

50% Off ADVANCE COURSES
Diploma in Multimedia ~~5500~~ 2750
Diploma in Video Editing ~~6500~~ 3250

வகுப்புக்கள் ஆரம்பம் :
Batch I :04/04/2008 1PM
Batch II :05/04/2008 2PM
Batch III :06/04/2008 2PM
Batch IV :09/04/2008 1PM

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும். சர்வதேச அங்கீகாரம்பெற்ற சான்றிதழ். வரையறுக்கப்படாத கணனிப்பயிற்சி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

# மெல்ல வெளிவரும் உண்மைகள்

மூதூரில் சர்வதேச மனித நேயத் தொண்டர் அமைப்பின் பதினேழு பணியாளர்கள் படுகொலை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பாகப் புதிய திருப்பம் ஏற்பட்டிருக்கின்றது.

இந்தக் கொடூரத்தின் சூத்திரதாரிகள் யார், அதன் பின்புலத்தில் செயற்பட்ட அதிகாரத்தின் அரூபக் கரம் எது என்பவை பற்றிய தகவல்களை அம்பலப்படுத்தியிருக்கின்றது 'மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள்' என்ற அமைப்பு

கலாநிதிகள் ராஜன் ஹூல், ஸ்ரீதரன் போன்றோரைக் கொண்ட இந்த அமைப்பு இலங்கையில் பல்வேறு களமுனைகளிலும் இழைக்கப்படும் அராஜகங்கள் தொடர்பாக அவ்வப்போது தனது சொந்தப் புலனாய்வு அறிக்கைகளை விலாவாரியாக வெளியிட்டு வருகின்றது.

இப்போதும் கூட அந்த அமைப்பு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்படி தொண்டு நிறுவனப் பணியாளர்களின் படுகொலைச் சூத்திரதாரிகள் தொடர்பாகக் குறிப்பிடப்பட்ட விடயங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட - முடிந்த - முடிவுகள் அல்ல. மேலதிக சட்ட விசாரணைகள் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டிய அம்சங்கள் அவை. அத்தகைய நேர்மையான - நியாயமான - விசாரணைகள் சாத்தியமாகும்போது, அவற்றுக்கு வழி காட்டக்கூடிய அடிப்படை அம்சங்களும், விடயங்களும் இந்த அறிக்கையில் அடங்கியிருக்கலாம்.

இந்த மனிதநேயத் தொண்டுப் பணியாளர்கள் படுகொலைக்கு அரசுத் தரப்பே காரணம் என்று குறிப்பிட்டு, அந்தக் கொடூரத்தின் பின்புலத்தில் நின்ற அதிகாரிகளின் பெயர், விவரங்களை விலாவாரியாக அம்பலப்படுத்தி மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக அமைப்பு எல்லா விடயங்களையும் புட்டுப்புட்டு வைத்திருக்கின்றது.

இந்த அமைப்பின் புலன் விசாரணைகளும், உண்மைகளை அம்பலப்படுத்த அது எடுத்த சாதுரியமான முயற்சிகளும் பாராட்டுக்கும் போற்றுதலுக்கும் உரியவை என சர்வதேச மனித உரிமைகள் அமைப்புகள் சில சிலாகித்துக் கூறியிருக்கின்றன.

இந்த அமைப்பினால் இப்போது வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் முற்றிலும் உண்மையாக இருக்கலாம். சில சமயம் உண்மையும் பொய்யும் கலந்தவையாகக் கூட அவை இருக்கலாம்.

ஆனால், இவ்வளவு காலமும் இந்த அமைப்பு வடக்கு, கிழக்குக் கள நிலைவரத்தை ஒட்டி வெளியிடும் அறிக்கைகள் பெரும்பாலும் புலிகளைக் குறை கூறுவனவாக இருந்து வந்தமையால் அந்த அறிக்கைகளைத் தூக்கிப்பிடித்து, அவற்றை அப்படியே உண்மையுள்ள 'அரிச்சந்திர வாசகமாக' பிரபலாபித்து வந்தவை தென்னிலங்கை அரசும் தென்னிலங்கையும்தான்.

இப்போது மஹிந்தர் அரசின் முகமூடியைக் கிழித்து உண்மை முகத்தை அம்பலப்படுத்தும் விதத்தில் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு இவ்விவகாரத்தில் புலனாய்வு அறிக்கையை வெளியிட்டிருக்கும்போது கொழும்பு என்னதான் செய்யப்போகின்றது?

இதேசமயம், இந்த மனித நேயப் பணியாளர்களின் படுகொலைகள் உட்பட முக்கியமான மனித உரிமை மீறல்கள் குறித்து விசாரணை நடத்த நியமிக்கப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழுவும் மேற்படி அறிக்கை குறித்து என்ன செய்யப் போகின்றது என்ற கேள்வி எழுகின்றது.

ஏற்கனவே இந்த ஆணைக்குழுவின் விசாரணைகளைக் கண்காணிப்பதற்காக ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட சர்வதேசப் பிரமுகர்களின் குழு, இவ்விசாரணையை ஒட்டி நடக்கும் குளறுபடிகள், காலதாமதங்கள், இழுபறிகள் போன்றவற்றைத் தாங்க முடியாது நேற்று முன்தினத்தோடு தனது பணியில் இருந்து ஒதுங்கிக்கொண்டு விட்டது.

இந்தச் சமயத்தில், மனிதநேயப் பணியாளர்களின் படுகொலை தொடர்பாகப் பூதம் போல் கிளம்பியிருக்கும் இந்தப் புலனாய்வு அறிக்கை குறித்து ஜனாதிபதி ஆணைக்குழு என்ன நடவடிக்கை எடுக்கப் போகின்றது?

ஆணைக்குழு விசாரிக்கும் ஒரு முக்கிய விவகாரத்தில் ஆணைக்குழுவின் முடிவுக்கும் தீர்மானத்துக்கும் முந்திக்கொண்டு, தன்பாட்டில் திட்டவட்டமான - தீர்க்கமான - தீர்மானம் ஒன்றை மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு வெளியிட்டு அம்பல படுத்தியதன் மூலம் ஆணைக்குழுவுக்கு அவதூறு ஏற்படுத்தி, ஆணைக்குழுவின் பணிக்கு ஊறு விளைவித்து விட்டது என்று தெரிவித்து அந்த அமைப்பின் மீது நடவடிக்கை எடுக்க முயலுமா?

அல்லது பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்பு புட்டுப் புட்டு வைத்த உண்மைகளையும், கவனத்தில் எடுத்து அவற்றின் அடிப்படையிலும் மேலதிக விசாரணைகளை நடத்தி, உண்மைகளைக் கண்டறியும்படி உரிய புலனாய்வுப் பிரிவுகளுக்கு அது உத்தரவிட்டு, உரிய வழிகாட்டுதல்களை வழங்குமா?

அல்லது பல்கலைக்கழக ஆசிரியர் அமைப்பு அம்பலப்படுத்திய விவகாரங்களை ஒதுக்கி, உதாசீனப்படுத்தி விட்டு, ஏற்கனவே தான் கடந்து வந்த மெத்தனப் பாதையையே தொடர்ந்தும் பின்பற்றி, உண்மை, உள்ளாந்தரம் ஏதும் அம்பலமாகாமல் ஆணைக்குழு பார்த்துக்கொள்ளுமா?

இந்த ஆணைக்குழுவின் விசாரணைகளை நேரடியாகக் கண்காணிக்க நியமிக்கப்பட்ட சர்வதேசப் பிரமுகர்கள் குழு தன்து பணியிலிருந்து ஒதுங்கிக் கொண்டு விட்டாலும் முழு சர்வதேசத்தின் பார்வையும் இந்த ஆணைக்குழுவின் செயற்பாட்டில் வைத்த கண் வாங்காமல் பதிந்தே இருக்கின்றது.

அதனால் இத்தகைய மோசமான மனித உரிமை மீறல் சம்பவங்கள் தொடர்பில் உண்மைகளைக் கண்டறிந்து அம்பலப்படுத்தாமல் சமாளிப்பது - அல்லது சளாப்புவது - இந்த ஆணைக்குழுவுக்குக் கஷ்டமான காரியமாகவே இருக்கும்.

அத்தகைய நெருக்குவாரத்துக்குள் ஆணைக்குழுவைக் கொண்டுபோய் தள்ளியிருக்கின்றது மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்களின் தற்போதைய புலனாய்வு அறிக்கை.

# போராட்டத்தில் திருப்புமுனையான காலம் கனிந்திருக்கிறது சண்டையை வெல்லும் சூழலுக்கு நாம் வந்துவிட்டோம்

## புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் நடேசன் உரை

கொழும்பு, ஏப். 2



எமக்கு விடுதலைப் போராட்டத்தில் திருப்புமுனைகளை ஏற்படுத்தும் காலம் இப்போது கனிந்திருக்கின்றது. சண்டையை வெல்லக்கூடிய சூழலுக்கு நாம் வந்துவிட்டோம்.

இவ்வாறு தெரிவித்துள்ளார் விடுதலைப் புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் பா.நடேசன் .

நேற்று முன்தினம் திங்கட்கிழமை வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தில் தேசிய பணிக் குழுவினருடன் இடம்பெற்ற சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது: -

அரசிற்குப் பல உலக நாடுகள் ஆயுத உதவிசெய்கின்றபோதும் நாம் அவர்களை எதிர்கொண்டு நிமிர்ந்து நிற்கின்றோம் என்றால் அது மக்களாகிய உங்களின் பலத்தினால்தான். சிறிலங்கா இராணுவம் தற்போது மிகவும் பலவீனப்பட்டுப்போயுள்ளது.

வட்டக்கட்சிக் கோட்டத்தினுடைய செயற்பாடுகள் தொடர்பாக நிறையக் கேள்விப்பட்டிருக்கின்றேன். இதே போல் ஒவ்வொரு கோட்டத்திலும் தேசிய பணிக்குழுவின் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவேண்டும்.

ஒவ்வோர் இடத்திலும் எங்களுடைய போராட்டத்திற்குப் பலம் சேர்க்கக்கூடிய முறையில் மக்களை அணிதிரட்டும் அமைப்பாகத்தான் தேசிய பணிக்குழு உருவாக்கப்பட்டது.

ஒவ்வொரு காலகட்டத்திலும் எங்களுடைய போராட்டத்தை வளர்த்தெடுப்பதற்காக மக்கள் வேறுபாடு இன்றித் தங்களை முற்றுமுழுதாக அர்ப்பணித்துள்ளார்கள்.

பொருளாதார ரீதியாக எல்லாப் பிரச்சினைகளுக்கும் முகம் கொடுத்துக்கொண்டே இயன்றவகையில் எல்லா வழிகளிலும் இந்தப் போராட்டத்தை வளர்த்தெடுப்பதில் மிகப்பெரிய பங்காற்றி இருக்கின்ற மக்களாக நீங்கள் உள்ளீர்கள்.

அது சமாதான காலம் என்றாலும் சரி, சண்டைக்காலம் என்றாலும் சரி எங்களுடைய மக்கள் குறிப்பாக உங்களைப்போன்று தேசியப் பணிக்குழுவில் இருக்கிறவர்கள் சேவை செய்துகொண்டுவருகின்றீர்கள்.

இந்திய இராணுவ காலத்தில் போராளிகளுக்குப் பாதுகாப்பு அளிப் பதில் இருந்து போராளிகளுக்கு உணவு வழங்குவதில் இருந்து நிறையப் பங்களிப்புச் செய்துள்ளீர்கள்.

இதனால் பலபொதுமக்கள் இராணுவத்தினரால் சித்திரவதைக்குட்படுத்தப்பட்டுள்ளார்கள். இப்படிப் பெரிய பெரிய அர்ப்பணிப்புகள் செய்துள்ளீர்கள்.

இது சாதாரண அர்பணிப்பல்ல. வீட்டுக்கொருவர் என்று போராளிகளாகப் பயிற்சி வழங்கப்பட்டோர் இன்று திறமையான போராளிகளாக இருக்கின்றார்கள். திறமை சாதனைகள் படைக்கக்கூடிய போராளிகளாகத் தற்போது இணைக்கப்பட்ட போராளிகள் உள்ளார்கள். தேசிய பணிக்குழு சில கிராமங் களில் இருந்து தங்களை வந்து பார்ப்பது தங்களுக்குச் சரியான உற்சாகமாக இருக்கின்றதென்று களமுனையில் உள்ள போராளிகள் மகிழ்வுடன் தெரிவிக்கிறார்கள்.

அவர்கள் சாதாரண போராளிகளாக இருப்பது மட்டுமல்ல கரும்புலிகளாகப் போவதற்குப் பெயர் கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

நீங்கள் ஒருநாள், இரண்டு நாள் களமுனைகளுக்குப்போய் அவர்களுக்கு உலர்உணவு கொடுத்து வரும்போது அந்தந்தப் போராளிகளுக்கு மிகப் பெரிய மகிழ்ச்சியாகவும் உற்சாகமாகவும் இருக்கும். முழுப் பலத்தைப் பயன்படுத்தி மிகவேகமாக இந்த மண்ணை மீட்கவேண்டும். விடுதலையை வெல்லவேண்டும் என்ற உணர்வு உங்களைப் பார்த்தவுடன் அவர்களுக்கு வரும்.

ஒவ்வொரு காலத்திலும் புதுப்புது நெருக்கடிகள் சவால்களுக்கு முகங்கொடுக்கவேண்டும். அந்தச் சவால்களை எல்லாம், அந்த நெருக்கடிகளை எல்லாம் மக்களுடைய ஆதரவுடன் தான் வெல்ல வேண்டும்.

இந்திய இராணுவத்துடன் மோதி வென்றதும் உங்களுடைய பின்பலத்தால்தான் சிறிலங்கா இராணுவத்துடன் போராடுவதில் இருந்து அவர்களை முறியடித்தும் போராட்டத்தை வெற்றிகரமாக வெல்வதும் உங்களின் செயற்பாடு களிலேயே தங்கியுள்ளது - என்றார்.

# ஓமந்தை சோதனை நிலையத்தை சனிக்கிழமைகளிலும் திறக்க நடவடிக்கை

## செஞ்சிலுவைக் குழு அறிக்கையில் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 2

ஓமந்தைச் சோதனை நிலையம் வாரத்தில் திங்கள் தொடக்கம் வெள்ளி வரையே போக்குவரத்திற்குத் திறந்திருந்தது. இனிவரும் காலங்களில் சனிக்கிழமைகளிலும் இது திறந்திருக்கும் என்று செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு அறிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பாகச் செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது :

ஏ - 9 வீதியில் அனுராதபுரம் மாவட்டத்தில் உள்ள மதவாச்சி சோதனை நிலையத்திலும் வவுனியா, ஓமந்தை சோதனை நிலையத்திலும் அரசால் மேலதிகமாகப் பாதுகாப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதனால் விடுதலைப் புலிகளின் பிரதேசத்திற்கும் இராணுவத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசத்திற்கும் இடையிலான பொதுமக்களின் போக்குவரத்து தாமதமடைய நேரிட்டுள்ளது.

வர்த்தகத் தேவைக்காக மக்கள் செல்வதிலும் தாமதம் காணப்படுகின்றது.

இந்நிலையில் அரசின் வேண்டுகோளை ஏற்றுச் சனிக்கிழமைகளிலும் ஓமந்தை சோதனை நிலையம் ஊடாக வாகனப் போக்குவரத்து நடைபெறுவதற்கான செஞ்சிலுவைக் குழுவினர் மேலதிகக் கடமையில் ஈடுபட்டுள்ளனர் - என்று அந்த அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

இதற்கிடையில் -

வன்னிப்பிரதேச அரச வைத்திய சாலைகளுக்கென சுகாதார அமைச்சால் அனுப்பப்பட்ட மருந்துப் பொருள்கள் வவுனியாவில் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளன.

அவற்றை ஓமந்தை ஊடாகக் கொண்டு வருவதற்குப் பாதுகாப்பு அமைச்சின் அனுமதி பெறுவதில் காலதாமதம் நிலவுகின்றது.

இந்நிலையில் -

ஓமந்தை சோதனை நிலையம் சனிக்கிழமைகளிலும் திறக்கப்படுவதால் பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை என்று கிளிநொச்சி மாவட்ட பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார். (203)

# சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தீர்வு யோசனையை இம்மாத முடிவுக்குள் வெளியிடுமாறு வற்புறுத்துகின்றார் ரணில்!

கொழும்பு, ஏப். 2

ஏப்ரல் மாதம் முடியும் முன் சர்வ கட்சிப் பிரதிநிதிகள் குழுவின் இனப் பிரச்சினைக்கான தீர்வு யோசனை கட்டாயம் முன்வைக்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வலியுறுத்தியுள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தையும் தாமதிக்காது நடைமுறைப்படுத்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அவர் கூறினார்.

குருநாகல் மாவட்ட ஐ.தே.கட்சி எம்.பி. காமினி ஜயவிக்ரம பெரேராவின் அரசியல் வாழ்க்கையின் 40 ஆவது ஆண்டு நிறைவையொட்டி குருநாகல் பன்னலவில் நிகழ்வொன்று இடம்பெற்றது. அதில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ரணில் மேற் கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

இந்தியாவில் உள்ள தாஜ்மஹாலையும், எகிப்தில் உள்ள பிரமிட்டையும், இங்கிலாந்தில் உள்ள பக்கிங்ஹாம் மாளிகையையும், நியூயோர்க் நகரையும் பார்ப்பதற்காக மக்கள் அங்கு சென்று வருகின்றனர்.

ஆனால், எமது நாட்டு அரசியல்வாதிகள் இலங்கைப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வுபற்றிப் படிப்பதற்காகவே 20 வருடங்களாக அந்நாடுகளுக்குச் சென்று வருகின்றனர்.

இவர்கள் இதுவரை கண்ட பலன் எதுவுமில்லை. இன்னும் உருப்படியான தீர்வுத்திட்டம் முன்வைக்கப்படவில்லை.

இனப்பிரச்சினைக்கான இறுதித் தீர்வு யோசனையை ஏப்ரல் மாத முடிவுக்குள் தாம் முன்வைக்கப்போகிறார் என்று சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

அத்தீர்வு யோசனையை முன்வைப்பதற்கு இனி மேலும் காலந் தாழ்த்துவது சரியில்லை. ஏப்ரல்மாதமுடிவுக்குள் இத் தீர்வுயோசனை கட்டாயம்முன் வைக்கப்பட்டே ஆகவேண்டும்.



அனைவரும் ஏற்றுக்கொள்ளக் கூடிய பொருத்தமான தீர்வை முன் வைத்து, அதனூடாகப் பிரிவினை வாதத்தையும் பயங்கரவாதத்தையும் தோற்கடித்து, நிலையான சமாதானத்தைத் தோற்றுவிக்க வேண்டும்.

13 ஆவது திருத்தச்சட்டமும் முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை நான் சந்தித்துப் பேசியபோது 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமை யாக நடைமுறைப்படுத்துமாறு வேண்டுகோள்விடுத்தேன் - என்றார். (சி)

## நாளை

| | |
|---|---|
| பங்குனி 21 | 03.04.2008 வியாழக்கிழமை |
| திதி: துவாதசி | பி.ப. 02.09 |
| நட்சத்திரம் : | சதயம் பி.இ.12.47வரை |
| பிரதோஷ விரதம் | |
| சுபநேரம் : | 07.40 - 09.10 |
| ராகுகாலம் : | 01.40 - 03.10 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெற்றிலை சின்னத்தில் போட்டியிட பிள்ளையான் குழு பச்சைக்கொடி

கொழும்பு,ஏப்.2

எதிர்வரும் கிழக்கு மாகாணசபைத் தேர்தலின்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றிலைச் சின்னத்தின் கீழ் போட்டியிட பிள்ளையான் குழு தீர்மானித்துள்ளது. இந்தத் தீர்மானம் குறித்து தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் (பிள்ளையான் குழு) கட்சியைச் சேர்ந்த கைலாஸ்வர் ஊடகங்களுக்குத் தெரிவித்துள்ளார்.

தமிழர் ஒருவருக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் பதவி வழங்கப்படும் என்று ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தலைமைத்துவம் எடுத்துள்ள முடிவைத் தொடர்ந்து பிள்ளையான் குழு வெற்றிலைச் சின்னத்தில் போட்டியிடவுள்ளது.

இதன்படி, பிள்ளையான் குழுவின் முதலமைச்சர் வேட்பாளராகப் பிள்ளையான். என்றழைக்கப்படும் சிவநேசத்துரை சந்திரகாந்தன் மட்டக்களப்பு மாவட்டத்தில் போட்டியிடவுள்ளார். தேசிய சமாதானம், கிழக்கு அபிவிருத்தி ஆகிய தொனிப் பொருள்களை முதன்மையாகக் கொண்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இம்முறை கிழக்குத் தேர்தலில் களமிறங்கவுள்ளது.

எனினும், தமது கட்சியின் முதலமைச்சர் பதவி வேட்பாளராக பிள்ளையான் நியமிக்கப்படமாட்டார் என அக்கட்சியின் பொதுச் செயலாளர் சுசில் பிரேம ஜயந்த அண்மையில் ஊடகங்களுக்குத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (சி)

## மரண அறிவித்தல்கள்

### கதிரவேலு அருணா



புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் மேற்கு, பூநாறி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு கதிரவேலு அவர்களின் மகன் அருணா 29.03.2008 அன்று ஜேர்மனியில் அகாலமரணம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கதிவேலு - விக்கினேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும் அருணா இராஜேஸ்வரியின் கணவரும் சண்முகலிங்கம், சதானந்தன், தயாளன் ஆகியோரின் சகோதரருமாவார்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தயாளன் (சகோதரன்).

(72658)

### சதாசிவம் தர்மராசா



சாவகச்சேரி, சங்கத்தானை, பொற்தொழிலாளர் வீதியைப் பிறப்பிடமாகவும், 48/11, தேங்காய்மூலை, கொக்குவில் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட சதாசிவம் தர்மராசா 30.03.2008 ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சதாசிவம் மற்றும் கனகம்மா தம்பதியரின் அன்பு மகனும் கந்தசாமி, காலஞ்சென்ற நேசம்மா தம்பதியரின் மருமகனும் சொர்ணமலரின் அன்புக்கணவரும், குணசீலநாதன், சிந்துஜா, நிலோஜன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இலட்சுமிகுமாரின் அன்பு மாமனும் கஜானிகாவின் அன்புப் பேரனும் துரைராசா, சுசீலாதேவி, ஜெயதேவி ஆகியோரின் அன்புச் சகோதரனும், சிவலோகநாதன், சுசீலாதேவி, கிருஷ்ணசாமி ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2008) புதன்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

48/11, தேங்காய் மூலை,
கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

தகவல்:
நிலோஜன் (மகன்).

(72651)

### திருமதி கணபதி நாகமுத்து



தாவளை, இயற்றாலை, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதி நாகமுத்து நேற்று (01.04.2008) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற கணபதியின் அன்பு மனைவியும் நடராசா, யோகநாதன், மகேஸ் வரி, இராமச்சந்திரன், சிவபாதம் (தவம்), காலஞ்சென்ற சிவசரணம், புவனேஸ்வரி, தவமலர் ஆகியோரின் பாசமிகு தாயும் தனபாக்கியலட்சுமி, மங்கையர்க்கரசி, யோகேஸ்வரி, காலஞ்சென்ற பவளராணி, சற்குருநாதன், தேவராசா, மகேந்திரம் ஆகியோரின் அன்பு மாமியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2008) புதன்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கட்டைப்பறிச்சான் இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தாவளை,
இயற்றாலை,
கொடிகாமம்.

தகவல்:
சிவபாதம் (தவம்- மகன்)

(72664)

# பிரபாகரன் திரைப்படத்தின் மூலப் பிரதியை பெற்றுத்தரக்கோரி இந்திய தூதருக்கு கடிதம்

## ஐந்து ஊடக அமைப்புகள் ஒன்றாகக் கோரிக்கை

கொழும்பு, ஏப்.2

இலங்கைத் திரைப்பட இயக்குநர் துஷார பீரிஸின் ''பிரபாகரன்'' என்னும் திரைப்படத்தின் மூல ஒளி நாடாவை மீளப் பெறுவதற்கு உதவுமாறு, கொழும்பிலுள்ள இந்தியத் தூதுவர் அலோக் பிரஷாத்திடம் ஐந்து ஊடக அமைப்புகள், கடிதமொன்றின் வாயிலாகக் கேட்டுள்ளன.

தற்போது இத்திரைப்பட மூலப்பிரதி தமிழ் நாட்டிலுள்ள ஜெமினி ஸ்டூடியோவின் உடைமையாக உள்ளது என்றும் இந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. அதில் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

தமிழ்நாடு திரைப்பட இயக்குநர் சங்கத்தினர் என தம்மை அறிமுகப்படுத்திக் கொண்ட ஒரு குழுவினரால் சென்னையில் திரைப்பட இயக்குநர் பீரிஸ் தொல்லைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ளார். இது கண்டனத்துக்குரியது.

இச் சம்பவம் தொடர்பான எமது கவலையைத் தெரிவித்துக் கொள்கிறோம். ஊடக கோட்பாட்டுச் சுதந்திரம் மீதே நாம் சிரத்தை காட்டுகிறோம். அத்திரைப்படத்தின் உள்ளடக்கம் பற்றியல்ல.

அடிப்படை உரிமைகளில் கருத்து வெளியீட்டு உரிமையும் அடங்கும். இது எம்மிரு நாடுகளாலும் ஏற்றுக்கொள்ளப்பட்டதொன்றாகும்.

சமூக, பொருளாதார, அரசியல் கருவூலம் ஆகியவை தொடர்பான திரைப்படங்களோ, கலாசார ரீதியிலான படங்களோ இந்தக்கோட்பாட்டு உரிமைக்கேற்பவே தயாரிக்கப்படுகின்றன என்பது கவனத்துக்குரியது.

இந்த அடிப்படையில் சமீபத்தில் பீரிஸுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள தாக்குதலை நோக்கும் போது, இது ஒரு உரிமை மீறலாகவே உள்ளது. ஊடகச் சுதந்திரம், கருத்து வெளியீட்டுச் சுதந்திரம் ஆகியவற்றுக்கு ஆதரவு நல்குவதற்கும் அவற்றைப்பலப்படுத்துவதற்கும் இரு நாட்டு அரசுகளினதும் மக்களினதும் ஒத்துழைப்பு அவசியமானதாகும்.

ஜனநாயக ஆட்சி முறைமையின் குறிக்கோள்களைப் பகிர்ந்து கொள்வதற்கான பணியில் ஈடுபடும் அதே தருணத்தில், எதிர்காலத்தில் உறுதிப்பாடான நல்லிணக்கப்பாடுகளையும் நாம் எதிர்பார்க்கின்றோம் என்றும் அவை மேலும் தெரிவித்துள்ளன.

இந்த ஐந்து ஊடக அமைப்புகளில், இலங்கை உழைக்கும் பத்திரிகையாளர் சங்கம், ஊடக ஊழியர் தொழிற்சங்கச் சம்மேளனம், ஸ்ரீலங்கா முஸ்லிம் ஊடக போரம், இலங்கை தமிழ் பத்திரிகையாளர் கூட்டமைப்பு, சுதந்திர ஊடக இயக்கம் ஆகியன அடங்கும். (சி)

# சங்கானைப் பகுதியில் மீண்டும் பாதீனியம்

சங்கானை,ஏப்.2

சங்கானைப் பகுதிகளில் பாதீனியத் தின் வளர்ச்சி அதிகரித்துள்ளதால், இப் பகுதிகளில் தமது தோட்டச் செய்கையை மேற்கொள்ளும் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளனர்.

கடந்த காலங்களில் இதனை அழிப்ப தற்கு கமநல சேவை உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுத்ததாகவும் தற்போது மீண்டும் இதன் பரம்பல் அதிகமாக உள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இவற்றை அழிக்க சம்பந்தப்பட்டவர்கள் முன்வந்தால் பொதுமக்களின் உதவியோடு அழிக்கலாம் எனவும் விவசாயிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (203-29)

# மாவட்டக் கண்காணிப்புக் குழுக் கூட்டம்

யாழ்.சுகாதார திணைக்களத்தின்கீழ் இயங்கும் வைத்திய நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவற்றுக்கான மாவட்ட கண்காணிப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிக்கு யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்குச் சமுகமளிக்குமாறு வைத்திய நிறுவனத் தலைவர்களையும் அரச சார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகளையும் பணிப்பாளர் கேட்டுள்ளார். (203)



## தவறிவிட்டது

கீரிமலை தெற்கு, கீரிமலை என்னும் முகவரியைச் சேர்ந்த வேலாயுதம் ரசிகரன் என்பவரது தேசிய அ.அட்டை (820844289V) தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் ஆஸ்பத்திரி வீதி, வடலியடைப்பு, பண்டத்தரிப்பு என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். T.P.: 077 6728444 (72657)

## நாய்க்குட்டி விற்பனைக்கு

"DALMESAN" டல்மேசன்
நாய்க்குட்டிகள் விற்பனைக்குண்டு.
தொடர்புகொள்ளவும்
T.P.: 077 4016763
வி.காலநாதன்,
புலோலி தெற்கு, பருத்தித்துறை.
(சி/552080)


## ஓராண்டு நினைவஞ்சலி



### இரத்தினம் சிவபாக்கியம்

| தாயின் மடியில் | இறைவன் அடியில் |
|---|---|
| 25.12.1925 | 15.03.2007 |

ஓராண்டு கடந்து சென்றாலும்
ஓயாதம்மா உங்கள் ஞாபக அலைகள்
ஆறாதம்மா எங்கள் கண்ணீர்கள்
உங்கள் நினைவலைகள் பின்னியது - எம்
உள்ளத்தோடும் உயிரோடுமல்லவா?
அன்னைமடியில் தவழ்ந்தறியோம்
அம்மா உந்தன் கரங்களிலேயே
எம்மைத் தாங்கிப் பாசத்தை ஊட்டி வளர்த்தாய்
நன்றி எனும் வார்த்தையில் முடியுமா இந்த உறவு
உம்முடன் வாழ்ந்த நாள்கள் கோடி இன்பம்
மீண்டும் கிடைத்திடுமா இந்தப் பாக்கியம்
உங்கள் அன்புக்கு ஏங்கும்
உங்கள் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திக்கிறோம்
ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!

மகன்: அருள் (பிரான்ஸ்), மகள்: புனிதவதி
பேரப்பிள்ளைகள் : சுபோ, சுதா, சுயன், சந்திரிக்கா
மருமக்கள்: சுமதி (பிரான்ஸ்),
அரசரட்ணம் (அவுஸ்திரேலியா)

# இராணுவ உயர் அதிகாரி தாக்கல் செய்த மனுவுக்கு நீதிமன்றில் கைமேல் பலன்

கொழும்பு, ஏப். 2

விடுதலைப் புலிகளிடம் இருந்து குடும்பிமலையை விடுவிக்கும் யுத்தத்தில் ஒத்துழைப்பு வழங்கிய இராணுவ மேஜர் ஜெனரல் பராக்கிரம பன்னிப்பிட்டியவுக்கு போதிய பாதுகாப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சட்டமா அதிபர் உயர் நீதிமன்றுக்கு மீண்டும் அறிவித்திருக்கிறார்.

பராக்கிரம பன்னிப்பிட்டிய தாக்கல் செய்த அடிப்படை மனித உரிமை மீறல் மனு நேற்றுமுன்தினம் உயர் நீதிமன்றில் பரிசீலனைக்கு எடுத்துக் கொண்டபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நீதிமன்றம் முன்னர் பிறப்பித்த உத்தரவின் பிரகாரம் பராக்கிரம பன்னிப்பிட்டியவுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை என்று மனுதாரர் சார்பில் ஆஜரான ஜனாதிபதி சட்டத்தரணி தெரிவித்தார்.

இதனையடுத்து பராக்கிரம பன்னிப்பிட்டியவின் உத்தியோக பூர்வ இல்லத்திற்கு வழங்கப்படவேண்டிய பத்துப் பாதுகாப்புப் பிரிவினருக்குப் பதிலாக 8 பாதுகாப்புப் பிரிவினரை வழங்குமாறு நீதிமன்றம் உத்தரவிட்டது.

அவர்களில் இருவரை மனுதாரரின் கோரிக்கைக்கு அமைய தெரிவு செய்வதற்கு வாய்ப்பளிக்குமாறு நீதிமன்றம் சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டது. (சி)

## கண்ணீர் அஞ்சலி



எமது பரிபாலன சபை
உறுப்பினரும் அம்பிகையின்
தொண்டனுமாகிய
சி.இராசையா

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது சபை ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா அம்பிகையின் திருப்பாதங்களில் சாந்தியடைய அம்பாளைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆலய பரிபாலன சபை,
கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயம்,
நந்தாவில், கொக்குவில்.

(72662)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னபூரணம் கணபதிப்பிள்ளை



ஏழாலை மேற்கைப் பிறப்பிடமாக கொண்ட திருமதி அன்னபூரணம் கணபதிப்பிள்ளை நேற்று (01.04.2008) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அம்பலவாணர் கணபதிப்பிள்ளையின் அன்பு மனைவியும் கிருஷ்ணகுமார், உதயகுமார் (கனடா), ஜெயக்குமார் (டோகா), தவராணி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் சிலோசனா, சாமினி (கனடா), கலாவதி, உமாபாலன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமியும் கன்னிகா, மாதுலன், மிதுலன், கரீஸ் (கனடா), சமீனா, சபினயா, வர்சிகன் (பிரான்ஸ்) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (01.04.2008) செவ்வாய்க்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை.

தகவல்:
குடும்பத்தினர்.

(72658)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடாநாட்டு நீதிமன்றங்களின் வசதிகளை, வளங்களை விருத்தி செய்வது குறித்து உலக வங்கிக் குழு ஆராய்வு

யாழ்ப்பாணம், ஏப்.2

குடாநாட்டில் உள்ள நீதிமன்றங்களின் வளங்கள் மற்றும் வசதிகளை விருத்தி செய்வதற்கான சாத்தியங்கள் குறித்து ஆராய்வதற்காக உலக வங்கியின் குழு ஒன்று நேற்று இங்கு வருகை தந்தது.

உலக வங்கியின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி நோக் இசக்கீஸ் அம்மையார் மற்றும் மூன்று அதிகாரிகள் கொண்ட குழு நேற்று யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்தது.

உலக வங்கியின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட நீதிமன்ற வளாகத்தில் மேற்கொள்ளவேண்டிய மேலதிக வேலைகளை கேட்டறிந்த குழுவினர் யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜாவுடன் கலந்துரையாடினர்.

யாழ்.நீதிமன்ற வளாகம் திறக்கப்பட்ட தினத்தன்று மல்லாகம், சாவகச்சேரி நீதிமன்றங்களுக்கான கட்டடங்களை அமைக்க அடிக்கல் நடப்பட்டது என்று தெரிவித்த நீதிபதி, அக்கட்டடங்களைத் அமைக்க உலக வங்கி நிதி உதவி வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டனர்.

குடாநாட்டில் நீதிமன்றச் செயற்பாடுகள் குறித்து நீதித்துறையினருடன் ஆராய்ந்த குழுவினர் அரச அதிபர் சகிதம் நீதிமன்ற வளாகத்துக்குச் சென்று பார்வையிட்டனர்.

உலக வங்கிக் குழு அரச அதிபர் கே. கணேஷ் மற்றும் செயலக அதிகாரிகளுடனும் கலந்தாலோசித்தனர்.

உலக வங்கியின் உதவியுடன் குடாநாட்டில் மேற்கொள்ளப்படும் நீர்ப்பாசன மற்றும் வீடமைப்புத் திட்டங்கள் குறித்து இச்சந்திப்பில் விரிவாக ஆராயப்பட்டது. (அ-1)

## பண்டத்தரிப்பில் சடலம் மீட்பு

வலிதென்மேற்கு,ஏப்.2

பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரிக்குச் சமீபமாக பற்றையில் இருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் நேற்றுக்காலை மீட்கப்பட்டுள்ளது.

அந்தப் பிரதேசத்தைச் சேராத இந்த வயோதிபரின் சடலம் நேற்று மாலை வரை இனங்காணப்படவில்லை.

சம்பவ இடத்துக்குச் சென்ற மல்லாகம் நீதிவான் விசாரணைகளை நடத்திய பின்னர் சடலத்தை யாழ்.ஆஸ்பத்திரிக்கு அனுப்புமாறு உத்தரவிட்டார். (1-135)

# பெங்களூரில் கன்னடர்கள் ஆர்ப்பாட்டம்! மாநில எல்லையில் பதற்றம்; பஸ்கள் மறிப்பு!!

பெங்களூர்,ஏப்.2

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து பெங்களூரில் நேற்றுமுன்தினம் கர்நாடக அமைப்பினர் ரகளையில் ஈடுபட்டனர். தமிழ் சினிமா திரையரங்குகள் தாக்கப்பட்டன. தமிழக பஸ்களை மறித்துவைத்து ஆர்ப்பாட்டம் நடத்தியதால் இரு மாநில எல்லையில் பதற்றம் நிலவி வருகிறது.

தமிழக அரசு சார்பில் தர்மபுரி - கிருஷ்ணகிரி மாவட்ட மக்களின் குடிநீர்த் தேவைக்காக ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஜப்பான் நாட்டு நிதி உதவியுடன் நிறைவேற்றப்படவுள்ளது. இந்தத் திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவித்தும், ஒகேனக்கல் தங்களுக்கே சொந்தம் என்றும் கூறி கன்னட அமைப்பினர் அடிக்கடி ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.

'கர்நாடக ரக்ஷண வேதிகே' என்ற அமைப்பு, "ஒகேனக்கல் பகுதியில் தமிழக அரசு மேற்கொண்டு வரும் கூட்டுக் குடிநீர்த் திட்டம் தொடங்கியுள்ள இடத்தில் மத்திய அரசு நிலஅளவை செய்து அந்தப் பகுதி எந்த மாநிலத்தைச் சேர்ந்தது என்பதை எதிர்வரும் 9ஆம் திகதிக்குள் அறிவிக்க வேண்டும். தவறினால் 9ஆம் திகதிக்குப் பிறகு தமிழகத்தில் இருந்து கர்நாடகத்திற்கு வரும் பஸ்களை மறிப்போம். கர்நாடகத்தில் தமிழ் சினிமா திரையிட அனுமதிக்கமாட்டோம்" - என அறிவித்தது.

இந்த நிலையில், சென்னையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்த நிகழ்ச்சியில் தமிழக முதலமைச்சர் கருணாநிதி பேசும் போது, "ஒகேனக்கல் திட்டத்தை நிறைவேற்றியே தீருவோம்" என அறிவித்தார்.

இதைத்தொடர்ந்து நேற்றுமுன்தினம் பெங்களூரில் கன்னட அமைப்புகள், முதலமைச்சர் கருணாநிதியின் பேச்சுக்கு கண்டனம் தெரிவித்து ஆர்ப்பாட்டம் நடத்தின.

ஆர்ப்பாட்டக்காரர்கள், பெங்களூரில் தமிழ் சினிமா திரையிடப்படும் நடராஜ், சங்கீத் உள்ளிட்ட 9 திரையரங்குகளின் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இதுபற்றிய தகவல் கிடைத்ததும் பொலிஸார் வந்து ஆர்ப்பாட்டக்காரர்களை அப்புறப்படுத்தினார்கள். இந்த ஆர்ப்பாட்டத்தால் அந்த சினிமா திரையரங்குகள் அமைந்துள்ள பகுதிகளில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது. அந்தத் திரையரங்குகளில் சினிமாக் காட்சிகள் ரத்துச் செய்யப்பட்டன.

இந்தச் சம்பவத்துக்குப் பின்னர், 'கர்நாடக ரக்ஷண வேதிகே' அமைப்பினர், பெங்களூர் தமிழ்ச் சங்கத்துக்குச் சென்றனர். தமிழ்ச் சங்கத்தின் முன்பு வைக்கப்பட்டிருந்த பெயர்ப் பலகையை அடித்து உடைத்தார்கள். ஆர்ப்பாட்டக்காரர்களில் இருவர் தமிழ்ச் சங்க அலுவலகத்துக்குள் சென்று துண்டுப் பிரசுரங்களை வீசி விட்டு ஓடிவிட்டனர்.

இதேபோல மைசூரில் உள்ள கே.ஆர். சர்க்கிளில், கர்நாடக ரக்ஷண வேதிகேயைச் சேர்ந்தவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். இந்தச் சூழ்நிலையில் கர்நாடக எல்லையில் நேற்றுமுன்தினம் இரண்டு தமிழக பஸ்கள் அடுத்தடுத்துச் சிறைப் பிடிக்கப்பட்டன. இதனால், நேற்றுமுன்தினம் ஒசூரில் இருந்து கும்மளாபுரம் பகுதி வரை பதற்றமான சூழல் ஏற்பட்டுள்ளது.

## இலங்கைக்கு கடத்த முயன்ற போதைப் பொருள் பறிமுதல்

சென்னையில் இருந்து இலங்கைக்கு கடத்த முயன்ற 60 லட்சம் ரூபா பெறுமதியான போதைப் பொருள்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளன. இதனைக் கடத்த முயன்ற 3 பேர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர். மேற்கு அண்ணாநகர் பஸ்நிலையம் அருகே நின்றிருந்த காரை, போதைப் பொருள் தடுப்புப் பிரிவுப் பொலிஸார் இலங்கையைச் சேர்ந்த ஜெயபாஸ்கரன் (வயது - 53), முகமது மக்ரூப் ராஜா (வயது - 52), கேரளத்தைச் சேர்ந்த ரமேஷ் (வயது - 42) ஆகியோரை கைதுசெய்துள்ளனர்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை
திருமதி செந்தில்மதி சுரேந்திரன்
அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி காசிநாதர் ஆச்சிக்குட்டி**

அவர்களின் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிராத்திக்கின்றோம்.

பாடசாலை சமூகம்
யா/சிறுப்பிட்டி இ.த.க. பாடசாலை, நீர்வேலி.

## இலங்கை அகதிகளை ஏற்றிவந்த படகோட்டிகள் இருவர் கைது!

இராமேஸ்வரம்,ஏப்.2

இலங்கை அகதிகளை ஏற்றிவந்த 2 படகோட்டிகளை இராமேஸ்வரம் பொலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

மன்னார் பகுதியிலிருந்து நகுலேஸ்வரி (வயது - 34), அவரது பிள்ளைகளான சஞ்சீவன் (வயது - 13), லக்சிகா (வயது - 12), கனீஷா (வயது - 07) என்ற 4 பேர் பேசாலைக் கடற்கரையில் இருந்து புறப்பட்டு தனுஷ்கோடி அரிச்சல் முனைக் கடற்கரைப் பகுதிக்கு வந்துசேர்ந்தனர்.

இவர்களை ஏற்றிவந்த படகோட்டிகள் இலங்கைக்குத் திரும்பிச் சென்று கொண்டிருந்தபோது, இந்தியக் கடற்படைக்குச் சொந்தமான ஹெலிக்கொப்டர் மூலம், கடற்படை ரோந்துப் பிரிவினருக்கு இவர்கள் பற்றிய தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து படகோட்டிகள் இருவரும் கைதுசெய்யப்பட்டதோடு; அவர்களது படகும் பறிமுதல் செய்யப்பட்டது. பின்னர் அவர்களிடம் நடத்தப்பட்ட விசாரணையில், அவர்கள் மன்னாரைச் சேர்ந்த அன்ரன் (வயது - 39), வலன்ரன் (வயது - 29) என்பது தெரியவந்தது.

இதுபற்றி தொண்டி கடற்படைக் கட்டளை அதிகாரி புராணிக் கூறுகையில், இந்தியக் கடல் எல்லைக்குள் இலங்கைப் படகு வந்து சென்றதை ஹெலிக்கொப்டரில் இருந்த அதிகாரிகள் பார்த்ததும், படகைத் துப்பாக்கி முனையில் பிடித்து எங்களுக்குத் தகவல் கொடுத்தனர்.

படகில் இருந்த இவருவரும் போராளிகளா, மீனவர்களா, கடத்தல்காரர்களா என விசாரணை நடத்த தனுஷ்கோடிப் பொலிஸ் நிலையத்தில் அவர்களை ஒப்படைத்துள்ளோம். கடல் பகுதிகளில் தொடர்ந்து கண்காணிப்புப் பணி தீவிரமாக இருக்கும் - என்றார்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்



உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின்
பதில் அதிபராக கடமையாற்றும்

**சின்னையா மனோகரன்**

அவர்கள் யாழ்.பல்கலைக்கழகத்தில் கல்வி முதுதத்துவமாணி (M.Phil.) பட்டத்திற்கான சான்றிதழைப் பெற்றமையை இட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன் அவர் மேலும் பல பட்டங்களையும் பதவி உயர்வுகளையும் பெற்று வாழ்வில் சிறப்பான நிலையை அடைய உளம் நிறைந்து வாழ்த்துகின் றோம்.

உசன்,
மிருசுவில்.

ஆசிரியர் நலன்புரி சங்கம்
(a) யா/ உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்.

## பாராட்டி வாழ்த்துகிறோம்

எமது கல்லூரி ஆசிரியர்களான

**திரு. இ.பசுபதீஸ்வரன் அவர்கள்**
Dip.in Edu. பட்டம் பெற்றமை -

**திருமதி க.முத்துக்கிருஷ்ணன் அவர்கள்**
M. Edu.பட்டம் பெற்றமை -

**திரு. தி.இரவீந்திரநாதன் அவர்கள்**
H.N.D.Accy., Dip. in Eng. ஆகிய பட்டங்களைப் பெற்றமை -

**திரு. செ.இரவிச்சந்திரன் அவர்கள்**
M.Edu. பட்டம் பெற்றமை -

மேற்படி ஆசிரியர்களைப்பாரட்டி மேலும் பல பட்டங்களைப் பெறவேண்டும் என வாழ்த்துகின்றோம்.

யா/ செங்குந்த இந்துக் கல்லூரி,
திருநெல்வேலி கிழக்கு,
யாழ்ப்பாணம்.

கல்லூரி நலன்புரி மன்றம்
(72677)

## மரண அறிவித்தல்கள்

### திருமதி அன்னம்மா இராசமணி

யாழ்ப்பாணம், பாண்டியன்தாழ்வைப் பிறப்பிடமாகவும் வத்தளையை வசிப்பிடமாகவும் கொண்ட அன்னம்மா இராசமணி நேற்று(01.04.2008) செவ்வாய்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பத்திநாதன் மரியாம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும் பற்றிக் (ஓய்வுபெற்ற கணக்காளர், நீர்ப்பாசனத் திணைக்களம்), பேசி(UK), ஜொய்ஸ்(Canada), Fr.றெஜி ராஜேஸ்வரன்(பங்குத் தந்தை, OLR, யாழ்ப்பாணம்), யோகேஸ்வரன்(வவுனியா), அமிர்தினி(வத்தளை), அருளேஸ்வரன்(India) ஆகியோரின் அன்புத் தாயாரும் சறோஜினி, பாலாம்பிகை, வென்டன்கோன், சாந்தகுமாரி, ராஜு கிறிஸ்ரி, மாலா ஆகியோரின் மாமியாருமாவர்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.04.2008) புதன்கிழமை பி.ப. 2 மணியளவில் 160/20, அலஉரு வீதி,(Cannal Road, Top City) இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காக வத்தளை புனித அன்னாள் சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
ராஜு கிறிஸ்ரி
(மருமகன்)

(b)

### திருமதி தர்மரட்ணம் நல்லம்மா



கொக்குவில், கோணாவளையைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட நல்லம்மா தர்மரட்ணம் நேற்றுமுன்தினம் (31.03.2008) திங்கட்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் அமரர் வைத்திலிங்கம் தர்மரட்ணத்தின் அன்பு மனைவியும் அமரர் சரவணமுத்து - சின்னப்பிள்ளை தம்பதியரின் பாசமிகு மகளும் காலஞ்சென்ற நடராசா, காலஞ்சென்ற செ.பூமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சிவசுப்பிரமணியம் மற்றும் சறோஜினிதேவி, சாரதாதேவி, சர்வானந்ததேவி, சுசிலாதேவி (லண்டன்), பாலசுப்பிரமணியம் (ஜேர்மனி), ஜெயதேவி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் பாலசுப்பிரமணியம், தெய்வேந்திரம், நாகேந்திரம், சிவபால சிங்கம் (லண்டன்), செல்வரஞ்சிதம் (ஜேர்மனி), ஜோன்சன் (ஜேர்மனி) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற சுரேஸ்குமார் (ஜேர்மனி) மற்றும் துஸ்யந்தி, உதயகுமார், காலஞ்சென்ற துஜித்தா, துஸ்யந்தன் (ஜேர்மனி), கம்ஷபூசனி (ஜேர்மனி), தேனுகா, திபானா, பிரபாகரன், சுரேகா, நிறஞ்சலா, செல்வக்குமார், பிரதீபன், துசாளினி (லண்டன்), துசாளன் (லண்டன்), துளக்சினி (லண்டன்), கஸ்தூரி (ஜேர்மனி), கஸ்தூரன் (ஜேர்மனி), யாழினி (ஜேர்மனி), யசிந்தன் (ஜேர்மனி), ஜேம்ஸ் (ஜேர்மனி), கஜன் ஆகியோரின் அருமைப் பேர்த்தியும் முகிலன், கபிலன், அஜந் தன், அஜீவன், அர்ச்சனா ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.04.2008) புதன்கிழமை மு.ப.11 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பாலசுப்பிரமணியம்
(மகன் - பாலன்),
சு.தெய்வேந்திரம்
(மருமகன் - தேநீர்க்கடை, சங்கானை).

கோணாவளை ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(72678)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாணவருக்கு வழங்கப்படாதிருந்த உணவுப்பொருள்கள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்க அரச அதிபர் உத்தரவு

யாழ்ப்பாணம் ,ஏப்.2

வலிகாமம் வலயப் பாடசாலை ஒன்றில் உலக உணவுத்திட்ட விநியோகத்தில் இடம்பெற்றதாகச் சொல்லப்படும் முறைகேடுகள் குறித்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு அரச அதிபர் உத்தரவிட்டுள்ளார்.

இது தொடர்பாக நேற்று யாழ் செயலகத்தில் நடைபெற்ற கலந்துரையாடலிலேயே இந்த அறிக்கையை அரச அதிபர் கோரியுள்ளார்.

நேற்றைய கலந்துரையாடலில் மேலதிக மாகாணக் கல்விப்பணிப்பாளர், வலிகாமம் வலய கல்விப் பணிப்பாளர் ஆகியோர் கலந்துகொண்டனர்.

பிரஸ்தாப பாடசாலையில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது மாணவர்களுக்கு வழங்காது மறைத்துவைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் உணவுப் பொருள்கள் மீட்கப்பட்டதாக கூறப்படுவது தொடர்பாகவே கலந்துரையாடல் இடம்பெற்றது.

(அ-2)

## 17 மனித நேயப்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றம் சாட்டியுள்ளது.

இதேவேளை, குறிப்பிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் வருமாறு:-

மூதூரில் 2006 ஆம் ஆண்டு ஒகஸ்ட் நான்காம் திகதி பிரான்ஸைச் சேர்ந்த பட்டினிக்கு எதிரான அமைப்பின் 17 மனிதாபிமானப் பணியாளர்கள் அவர்களது அலுவலகத்தில் வைத்து சட்டவிரோதமாகப் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்தப் படுகொலைகள் குறித்த விவரங்களும் இப்படுகொலைக்கும் திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டதிற்குமிடையிலான தொடர்புகளும் இலங்கை அதிகாரிகளாலும் அவர்களது நிபுணர்கள் மற்றும் இராஜதந்திரிகளாலும் மறைக்கப்பட்டுள்ளன.

உண்மையைக் கண்டறிவதில் ஆர்வம் கொண்டவர்களின் உதவியுடன் மனித உரிமைகளுக்கான பல்கலைக்கழக ஆசிரியர்கள் அமைப்பு இந்தப் படுகொலையில் முஸ்லிம் ஊர்காவலர் ஒருவரும் இரு பொலிஸ் உத்தியோகத்தர்களும் சம்பந்தப்பட்டிருக்கின்றனர் என்பதைக் கண்டுபிடித்துள்ளது.

குறிப்பிட்ட சம்பவம் கடற்படையின் விசேட படையணியின் முன்னிலையில் நான்கு வகையான துப்பாக்கிகளைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### பொலிஸ் அதிகாரியின் முன்கூட்டிய அனுமதியுடன்

பொலிஸ் உயர் அதிகாரியொருவரின் முன்கூட்டிய அனுமதியுடனேயே இப்படுகொலைகள் இடம்பெற்றுள்ளமையை சாட்சியங்கள் புலப்படுத்துகின்றன.

எனினும், குறிப்பிட்ட இரு பொலிஸ் அதிகாரிகளும் இவ்வாறு அலட்சியமாக நடந்துகொள்வதற்குக் காரணமில்லை. மேலும் அவர்களுக்கு மனிதாபிமானப் பணியாளர்களைக் கொலை செய்யவேண்டிய அவசியமுமில்லை.

எனவே, திருகோணமலையில் உள்ள அவர்களது மேலதிகாரிகளிடமிருந்து மனிதாபிமானப் பணியாளர்கள் கொலைசெய்யப்பட வேண்டுமென உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கலாம் என நாங்கள் கருதுகின்றோம்.

விசேட அதிரடிப் படையினருக்குக் கொலைகளைப் புரிவதற்கு இடமளிக்குமாறு திருகோணமலையில் உள்ள உயர் அதிகாரிகள் உத்தரவிட்டிருக்கலாம். மேலும் விசேட படையினர் மேற்படி மனித நேயப் பணியாளர்கள் 17 பேரில் ஒருவரது கொலைக்காவது பொறுப்பாக இருந்திருக்கின்றனர்.

ஒகஸ்ட் நான்காம் திகதி திருகோணமலையிலுள்ள மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவரிடமிருந்து மனிதாபிமானப் பணியாளர்களைப் பாதுகாப்பாகத் திருகோணமலைக்கு அனுப்புமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், குறிப்பிட்ட பொலிஸ் உத்தியோகத்தர்கள் அவ்வாறு செயற்படவில்லை.

இதேவேளை, குறிப்பிட்ட முஸ்லிம் ஊர்காவலர், மேற்படி மனிதாபிமானப் பணியாளர்கள் அவர்களது அலுவலகத்திற்குள் தங்கியிருக்கின்றனர் என்பதை அறிந்துள்ளார்.

குறிப்பிட்ட அலுவலகம் புலிகளின் முகாமென அவர் இச்சம்பவத்துக்கு முன்னர் வாதாடியுள்ளார்.

குறிப்பிட்ட ஊர்காவலர் முன் கோபத்தில் தெரிவித்த இத்தகவலை மனிதாபிமானப் பணியாளர்களைக் கொல்வதற்கான வாய்ப்பாக உயர் அதிகாரிகள் பயன்படுத்தியுள்ளனர் என்றே நாங்கள் கருதுகின்றோம்.

குறிப்பிட்ட பொலிஸ் அதிகாரிகள், ஊர்காவற்படையினரையும் மெய்ப்பாதுகாவலர் ஒருவரையும், விசேட அதிரடிப்படையினரையும், மேற்படி அரச சார்பற்ற அலுவலகத்திற்குச் செல்லுமாறு உத்தரவிட்டுள்ளனர்.

### அதிரடிப் படையினர் அலுவலகத்தை சுற்றிவளைத்தனர்

இப்படி 25 இற்கு மேற்பட்டவர்கள் அரச சார்பற்ற அமைப்பின் அலுவலகத்திற்குச் சென்றுள்ளனர். விசேட அதிரடிப்படையினர் அந்த அலுவலகத்தைச் சுற்றிவளைத்துள்ளனர்.

அவ்வேளை, மனிதாபிமானப் பணியாளர்கள் தேநீர் அருந்திக்கொண்டிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

விசேட அதிரடிப்படையினர் "மூதூரிலிருந்து அனைவரும் வெளியேறிய பின்னர் நீங்கள் மட்டும் இங்கு என்ன செய்கிறீர்கள்?" - என அவர்களிடம் கேட்டுள்ளார். மனிதாபிமானப் பணியாளர்கள், தாங்கள் மேலிடத்து உத்தரவின் பேரில் தாங்கள் அங்கு தங்கியிருக்கின்றனர் எனக் குறிப்பிட்டுள்ளனர்.

குறிப்பிட்ட ஊர்காவலர் இடையில் குறுக்கிட்டு, மனிதநேயப்பணியாளர்களை அவர்கள் புலிகளின் உறுப்பினர்கள் எனக் குற்றம் சாட்டியுள்ளார்.

பின்னர் மனிதாபிமானப் பணியாளர்களை முழங்காலில் நிற்கவைத்து - அவர்கள் கெஞ்சிக் கேட்கவும் - இரக்கமின்றி சுட்டுக்கொன்றுள்ளனர்.

### திருமலை மாணவர்கள் கொலைகளுக்கும் இக்கொலைகளுக்கும் தொடர்புண்டு

கொலையாளிகள் இக் கொலைகளை முடித்துக்கொண்டு மீண்டும் பொலிஸ் நிலையம் திரும்பியவேளை அவர்களுக்கு அங்கு வீரசாதனைக்கான வரவேற்பு அளிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, மூதூரில் 17 மனித நேயப் பணியாளர்கள் கொலையுண்டமைக்கும் திருகோணமலையில் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்திற்கும் தொடர்புகள் உள்ளன.

மனிதாபிமானப் பணியாளர்களைப் படுகொலை செய்யுமாறு திருகோணமலையில் இருந்தபடி உத்தரவிட்டனர் என நாம் கருதும் அதே பொலிஸ் அதிகாரிகளே, மாணவர்களைப் படுகொலை செய்வதற்கும் திட்டமிட்டனர் என்றும் பின்னர் அதனை மறைத்தனர் என்றும் பலத்த சந்தேகம் காணப்படுகின்றது.

திருகோணமலையில் சுட்டுக்கொல்லப்பட்ட மாணவனின் சகோதரர் ஒருவர் தொடர்ந்தும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகி வந்தார். பின்னர் இவர் மூதூரில் படுகொலை செய்யப்பட்டார்.

திருகோணமலை கடற்கரைப் பகுதியில் ஐந்து மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பான ஒழுக்காற்று நடவடிக்கை மேற்படி பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக எடுக்கப்பட்டிருக்குமானால் மனிதாபிமானப் ப்ணியாளர்களைக் காப்பாற்றியிருக்கலாம் என்று கருத முடிகின்றது - என்று உள்ளது.

(உ)

## ஆயரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அளவற்ற பக்தி கொண்டவர்கள். சர்வமதத் தலைவர்கள், மனிதாபிமானிகள் மற்றும் சர்வதேச சமூகம் ஆகியோர்கள் எம்முடன் ஒன்றிணைந்து மடு தேவாலயத்தைப் பாதுகாக்க முன்வர வேண்டும் - என்று கோரிக்கை விடுத்துள்ளார். (அ-2)


யாழ்.மத்திய கல்லூரி
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்
வருடாந்தப் பொதுக்கூட்டம் - 2008

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் (06.04.2008) ஞாயிறு முற்பகல் 10 மணிக்கு பாடசாலை தம்பர் மண்டபத்தில் நடைபெறும்.
அனைத்து அங்கத்தவர்களும் தவறாது கலந்துகொள்ளுமாறு வேண்டப்படுகின்றார்கள்.

பா.கோடீஸ்வரநாதன்
செயலாளர்.
(இ/552082)


## புதுக்குடியிருப்பில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த முகாமில் புலிகளின் முக்கியஸ்தர்கள் தங்கியிருந்தமை உறுதிசெய்யப்பட்டுள்ளது. தரைமார்க்கமாக பெறப்பட்ட தகவல்களின்படி இந்தத் தாக்குதல் வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்டது என்று விமானப்படையினர் அறிவித்தனர்.

(அ-2)

## 5½ மணி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று முற்பகல் 11 மணிவரை நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து படையினர் பலத்த இழப்புக்களுடன் பின்வாங்கினர் இந்த மோதலில் 15இற்கும் அதிகமான படையினர் உயிரிழந்தனர். 25 இற்கும் அதிக படையினர் காயமடைந்தனர்.

படைக்கலங்கள் மற்றும் பெருமளவு வெடிபொருள்கள் தம்மால் கைப்பற்றப்பட்டன என்று புலிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை நேற்று முற்பகல் 9 மணியளவில் திருக்கேதீஸ்வரம் பகுதியில் இருந்து பாப்பாமோட்டை நோக்கி ஸ்ரீலங்கா படையினர் மேற்கொண்ட முன்னேற்ற முயற்சியையும் தாம் முறியடித்ததாக விடுதலைப் புலிகள் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

(அ-2)

## வன்னிக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பட்டுள்ளமையை மருந்துவமனை பதிவு செய்துள்ளது.

செப்ரெம்பர் 3ஆம் திகதியிலிருந்து உயிலங்குளம் சோதனைச் சாவடி மூடப்பட்டுள்ளது.

### மாந்தையில் மக்கள் இடம்பெயர்வு

மாந்தை மேற்கு பகுதியில் கடந்த ஒரு வார காலப் பகுதியில் பொதுமக்கள் இடம்பெயர்ந்துள்ளனர்.

1,600 குடும்பங்கள் உள்நாட்டில் இடம்பெயர்ந்தவர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளனர் என அரச அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். பாதுகாப்புக் காரணங்களுக் காக இவர்கள் கிராமங்களுக்கு உள்ளேயே இடம்பெயர்ந்துள்ளனர்.

பெப்ரவரி மாதம் தொடக்கம் ஓமந்தை சோதனைச் சாவடியூடாக பொதுமக்களின் பாவனைக்காக உணவுகளை எடுத்துச் செல்வதற்கு பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கவில்லையென மார்ச் 26ஆம் திகதி கிளிநொச்சி அரச அதிபர் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் உணவுப் பற்றாக்குறை காணப்படுவதாக பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் தெரிவிக்கின்றன. மாவட்டத்தின் வடக்குக் கிழக்குப் பகுதியில் உள்ள சில கிராமங்களில் கோதுமை மாவிற்கும் தட்டுப்பாடு நிலவுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்துக்கு என வவுனியாவில் சேமித்து வைக்கப்பட்ட - 2008இன் முதல் காலாண்டிற்கான - மருந்துகளை அங்கு கொண்டு செல்வதற்குப் பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கவில்லையென மாவட்ட சுகாதார அதிகாரியின் அலுவலகம் தெரிவித்துள்ளது.

அரச மருத்துவ நிலையங்களில் காணப்படும் மருந்து பற்றாக்குறை இதன் காரணமாக மேலும் மோசமடைந்துள்ளது.

வவுனியாவில் நிலைமை தொடர்ந்தும் பதற்றமானதாகக் காணப்படுகின்றது. மார்ச் 25ஆம் திகதி மன்னாரிலிருந்து உள்நாட்டில் இடம்பெயர்ந்த 15 குடும்பங்கள் வவுனியா வந்தன.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து சிறிய எண்ணிக்கையான மக்கள் கடல் மூலம் வந்து சேர்ந்துள்ளனர்.

ஐக்கிய நாடுகள் அமைப்புகளின் புதிய நடைமுறையின் படி மாந்தை மேற்கிலிருந்து இடம்பெயர்ந்த அனைவரும் களிமோட்டை பகுதியில் தங்கவைக்கப்பட்டுள்ளனர். குறிப்பிட்ட முகாமில் இதுவரை 119குடும்பங்கள் தங்கவைக்கப்பட்டுள்ளன.

இதேவேளை பூந்தோட்டம், சிதம்பரபுர முகாமில் உள்ள மக்களுக்கு கடந்த மூன்று மாதகாலமாக உலர் உணவு வழங்கப்படவில்லை.

பாதுகாப்பு நிலைவரம் காரணமாக சில இடங்களில் ஐக்கிய நாடுகள் அமைப்புகள் பணியை இடைநிறுத்தியுள்ளன.

- இவ்வாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)


Dip. in Computerized Accounting
(With Manual Accounting)
#MYOB #Quick Book Pro #Accpack #Tally
MCS
Supported by NORAD/RRF
New Batches Commence
50% off 1st 5 Students
324, Palaly Road, Jaffna.


## குடாநாட்டில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முடிவுகள் தபாலில் சேர்க்கப்பட்டுள்ளன என்று பரீட்சைத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பரீட்சை முடிவுகள் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்ட பின்பே இணையத்தளத்தில் வெளியிடப்படும் என்றும் -

இணையத்தளத்தில் www.doenets.lk என்ற முகவரியில் முடிவுகளைப் பார்வையிடலாம் என்றும் - பரீட்சைத் திணைக்களம் மேலும் தெரிவித்தது.

யாழ்.மாவட்டப் பாடசாலைகளின் முடிவுகள் நாளை அல்லது மறுதினம் வெள்ளிக்கிழமை விமானம் மூலம் அனுப்பிவைக்கப்படும் என்று பரீட்சைத் திணைக்களம் யாழ். கல்வித் திணைக்களத்துக்கு நேற்று அறிவித்தது. (அ-1)

## மு.கா.-ஐ.தே.க...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று மாவட்டங்களிலும் இரு கட்சிகளினதும் சார்பிலும் நிறுத்தப்படும் வேட்பாளர்களின் எண்ணிக்கை மற்றும் மாவட்ட ரீதியான முதன்மை வேட்பாளர் தெரிவு, முதலமைச்சர் பதவிக்கான வேட்பாளர் தெரிவு ஆகிய விவகாரங்கள் குறித்து இரு கட்சியின் மூத்த தலைவர்களும் நேற்று மாலையில் கொழும்பு, கேம்பிரிட்ஜ் பிளேஸில் உள்ள ரணிலின் அலுவலகத்தில் கூடிப் பேசிக் கொண்டிருந்தனர்.

முன்னதாக நேற்று முன்தினம் கூடிய ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீடம், தேர்தல் உடன்பாடு குறித்து ஐ.தே. கட்சியுடன் பேசித் தீர்மானிக்கும் அதிகாரத்தைக் கட்சியின் தலைவரும் எம்.பியுமான ரவூப் ஹக்கீமுக்கு வழங்கியது.

அதை அடுத்தே அவர் நேற்று ஐ.தே. கட்சித் தலைவருடன் இத் தேர்தல் தொடர்பான புரிந்துணர்வு உடன்பாட்டில் ஒப்பமிட்டார்.

இத் தேர்தலில் ஐ.தே.கட்சி சின்னத்தில் போட்டியிடும் அணிக்கு முதலமைச்சர் பதவி கிட்டுமானால், அது முஸ்லிம் காங்கிரஸுக்கே வழங்கப்படும் என்ற இணக்கமும் எட்டப்பட்டிருப்பதாகக் கூறப்பட்டது.(உ)

## மடுத்தேவாலயம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெயர்ந்துள்ளனர்.

இரு தரப்பினருக்கும் இடையிலான மோதலில் மடுத்தேவாலயம் பாதிக்கப்படுவதை தவிர்க்கும் வகையில் இரு தரப்பினரும் செயற்படவேண்டும் என்பதை வலியுறுத்தியும் சர்வதேச சமூகத்தின் கவனத்தை ஈர்க்கும் வகையிலும் இன்று புதன்கிழமை மன்னார் மறை மாவட்டத்தில் மௌன ஊர்வலம் நடத்தப்படவுள்ளது.

மடுத் தேவாலயத்தில் இன்று காலை 9.30 மணிக்கு நடைபெறும் விசேட வழிபாடுகளை அடுத்து மௌன ஊர்வலம் ஆரம்பமாகவுள்ளது.

தேவாலய வளவில் இருந்து ஆரம்பமாகும் மௌன ஊர்வலம் மன்னார் அரச செயலகத்தைச் சென்றடையும். அங்கு அரச அதிகாரியிடம் மகஜர் கையளிக்கவும் ஏற்பாடாகியுள்ளது என்று ஆயர் இல்ல வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த அபாயகரமாக நிலை குறித்து மன்னார் மறைமாவட்ட ஆயர் அதிவண இராயப்பு யோசப் ஆண்டகை தலைமையில் ஆயர் இல்லத்தில் கடந்த இரண்டு தினங்களாக விசேட கூட்டங்கள் நடத்தப்பட்டன.

இந்தக் கூட்டங்களில் மன்னார்,வவுனியா மறைமாவட்ட குருமார் 51 பேர் கலந்துகொண்டனர். இக்கூட்டத்திலேயே மௌன ஊர்வலம் குறித்துத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (அ-2)


COMPUTER EXPRESS
#167, Kasthuriyar Rd, Jaffna
Phone : 0779186277, 077222422
யாழ்நகரில் முதன்முறையாக!
அனைத்துவகையான Catridge, Toner கள் Refill செய்து ஒருவார காலத்தில் உத்தரவாதத்துடன் பெற்றுக்கொள்ளலாம்.
Toners

ஐடியல் அக்கடமி
சண்டிலிப்பாய், யாழ்ப்பாணம், மானிப்பாய்
ஆகிய மூன்று இடங்களிலும் ஒரே நாளில் ஒரே நேரத்தில்
O/L Day Class
ஆரம்பம் 09.04.2008 புதன் 8 a.m
குறிப்பு: மானிப்பாயில் ஏனைய வகுப்புகள் பிற்பகல் 4மணிக்கு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 02.04.2008 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.